# நெஞ்ச மாலை

[வாழ்க்கை அனுபவங்களை அவ்வப்போது பாடித் தொகுத்த உணர்ச்சிப் பாடல்கள்.]

கவியோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது.



சுத்தானந்த நூலகம்,
யோக சமாஜம்
அடையாறு, சென்னை-20.

# நெஞ்ச மாலை

கவியோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது.

விலை: 0—50 ந. பை.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

சுத்தானந்த நூலகம்,
யோக சமாஜம்
அடையாறு, சென்னை-20.

முதற்பதிப்பு, 1964.

உரிமை ஆசிரியருக்கே.

# நெஞ்சமாலை

1. நெஞ்சமாலை.
2. தனிப் பாடல்கள்.
3. சுத்தசக்தி வேகம்.
4. பரமாத்ம தியானம்.
5. அருள் விளக்கம்.
6. இதய கீதம்.
7. முருக ஜபம்.
8. குருவாயூரப்பன் மாலை.
9. சுத்த வேத தர்மம்.

20943

# பதிப்புரை

கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பாமாலைகளில் நெஞ்சமாலைக்குச் சிறப்பான இடமுண்டு. அருள்பெற்ற தெய்வப் புலவர்களை அறியாவுலகம் செய்த கொடுமைகளை நாம் அறிவோம். அடக்கமாக யோகத்தில் ஆழ்ந்து, உள்ளே பூத்த கவிமலர்களையும் சிந்தனைச் சிற்பங்களையும் கடவுளுக்கே வழிபாடாக்கி வாழும் நமது தவயோகிக்கு வந்த இடருந்துயரும் எண்ணற்றவை. உலகின் இயல்பையறிந்து அவற்றை மறந்து அவர் வாழ்வுக் கடமையை நிறைவேற்றினார். பொறுக்க முடியாத இடர்கள் வந்தபோதெல்லாம் அவர் இறைவனுக்கே முறையிட்டார்; அவை மனதில் ஒட்டாமல், நெஞ்சத்திற்குச் சமாதானம் சொன்னார். அந்தவகையிற் பாடப்பட்டதே இந்த நெஞ்சமாலையாகும். கவியோகியின் அனுபவக் கனிகளான தனிப்பாடல்களும் சமயோக சாதனப் பாடல்களும் இதில் அடங்கியுள்ளன. இந்த நூல் அன்புமணி எம். ஆர். பாலசுப்பிரமணியர் அவ்வப்போது அனுப்பிய அன்புக் காணிக்கையினின்று வெளியிடப் பெற்றது.

இந்த நெஞ்சமாலை எந்தத் தனிமனிதரையும் குறிப்பதன்று. உலகில் வரும் இடர்களைப் பொறுத்து, உயர்ந்த நிலையில் ஊன்றி யிருக்கத் தமது நெஞ்சிற்கே பாடிய பாமாலையாகும். இதை நெஞ்சுருகப் பாடி அன்புருக உள்ளத்தானைக் கூடி இன்புறுவோமாக!

சென்னை-20,
8—7—64.

சுத்தானந்த நூலகத்தார்.



கடவுளைக் கலந்து, கவிமழை பொழியும்
கவியோக சித்தரின் காட்சியைக் காணீர்!

# நெஞ்சமாலை

—o—

அள்ளித்தன் அன்பினாலே அஞ்சலென் றமைதி கூறி
உள்ளத்தி லுயிர்த்துடிப்பாய் நடமிடும் ஒருவனுண்டே
கள்ளத்தை மாற்று மந்தக் கருணையைக் கருதியிங்கே
எள்ளத்தனையும்வருந்தா தின்புற்று வாழ்வாய் நெஞ்சே!

இன்பமே இயல்பதாகி, இன்பமே ஈந்து, நல்ல
பண்புடன் உன்னைப் போற்றும் பசுபதி துணையிருக்க,
மன்பதைக் கிறைவனான மன்னவன் உள்ளிருக்கத்
துன்பமேன்? அச்சமேனோ? துணிந்துமுன் னேறு நெஞ்சே!

எத்தனை கண்டும் கேட்டும், எத்தனை விண்டுணர்ந்தும்
பித்தனைப் போலே யின்னும் பிதற்றிநீ யலைய லாமோ
மத்தலை தயிர்போ லான மனமலை யாதுள் ளூன்றிச்
சுத்தனை நினைநீ—காலத் தூசியென் செய்யு நெஞ்சே?

அன்பதே சமயமாகும் அருளதே சக்தியாகும்
இன்பதே கடவுளாகும் இதயமே வீடதாகும்
தன்பதந் தனக்குமுத்தி தான்தனக் குறவு சுற்றம்
என்பதே யுண்மையாகும்—எண்ணிப்பார் இனிய நெஞ்சே!

தண்மையே நீரியல்பாம், தணல்வதே தீ யியல்பாம்;
வெண்மையே ஒளி யியல்பாம் வெளிச்சமே விளக் கியல்பாம்;
வண்மையே முகிலி யல்பாம் வாய்மையே வாயியல்பாம்;
உண்மையே உள்ளியல்பாம் உள்ளதொன் றதுநீ நெஞ்சே!

அந்தரஞ் சுழலு கின்ற அளவிலா மீனுள் இந்தத்
தந்திர வுலகந் தூசி; தரங்கத்தில் அரங்க மாடும்
விந்தையைக்கண்டும், காலம் விழுங்கிடும் விரைவுகண்டும்
தொந்தமில்லாத தூய சொரூபத்தை நாடு நெஞ்சே!

திடம்பெறும் அன்பி னாலும் சிவம் பெறும் சிந்தை யாலும்
தடம் பெறுங் கருணை யாலும் தத்துவ ஞானத் தாலும்
இடம்பெறும் உலகில் வாழும் இன்னுயிர்க் குயிர தான
கடவுளைக் கலந்த வாழ்வே, வாழ்வெனக் கருதுநெஞ்சே !

நினை நினை உனது வாழ்வை, நிலையிலாவுலக வாழ்வை
நினை நினை சென்றகால நிகழ்ச்சியை ; மகிழ்ச்சி கொண்டு
நினை நினை ; நினைப்பே யற்று நின்னிலை கண்டுள்ளொன் றி
நினை நினை நீ நீயாகு நிலையினி அலையா! நெஞ்சே !

என்னுயிர்க் குயிர தாகி என்மனச் சாட்சி யாகி,
முன்னிலை இயற்கை யாகி மூல வியற்கைக் குள்ளே
புன்னகை யெழிலாயிங்கே புரிதொழி லைந்தி னாடும்
தன்னிலை தானும் தூய தன்மையைப் பாடு நெஞ்சே!...

அகத்துடன் புறமும் ஆகி அவன் அவள் அவையு மாகிச்
சகத்துடன் சித்தும் ஆகிச் சவத்துளே சிவம தாகி
இகத்துடன் பரமதாகி, இதயமாய், இதயத் துள்ளே
தகத்தக வென்றொன் றுடுந் தன்மையை யறிதி நெஞ்சே!...

மறைகளின் பொருள தாகி, மறைகளுக் கெட்டா மோன
நிறைவதாய் உள்ளத்துள்ளே நிருத்தமாய், பொருத்தமாகி
முறைசெயு மூலசக்தி முக்கன லொளியாய், எங்கும்
உறைபரம் பொருளை யெண்ணி உருகிடு தூயநெஞ்சே !

வேதமா முனிவர் வாக்கும் விரிமத முதல்வர் வாக்கும்
கீதையின் வாக்கும், ஏசு கிறிஸ்து ரசூலின் வாக்கும்
ஆதிசங் கரரின் வாக்கும், அப்பர்மா ணிக்க வாக்கும்
ஓதிய பயன்க ளெல்லாம் ஒருமையென் றறிவாய் நெஞ்சே!

ஆறினைத் தாண்டி ஏழில் அகநடம் புரியுஞ் சோதி,
ஏறிநின் றெட்டை எட்டி இருந்தவா றிலகுஞ் சோதி,
ஊறிநின் றுள்ள மெல்லாம் ஓமிசை பரப்புஞ் சோதி,
தேறிநின் றதுவே, யோக சித்தியென் றறிவாய் நெஞ்சே !

சொல்லினுக்கெட்டா ஒன்றைத் தூயவான்சோதிக்குன்றை,
எல்லையில் வான் சுடர்போல் எழுந்துளே நிறைந்த ஒன்றை,
தில்லையம் பலத்தில் ஆடும் சிற்சுகோ தயமாம் ஒன்றை,
அல்லுடன் பகலும் எண்ணி அதுமயம் ஆவாய், நெஞ்சே !

புண்ணுற நோவ தேனோ?... புறவுல கியல்பவ் வாறே;
நண்ணிய குருமார் தம்மை நலிந்திடத் தூற்றும் கண்டாய்;
பண்ணிய தவத்தின் வெற்றி பழுத்திடும் அருளை நாளும்,
எண்ணியே இருக்கு மட்டும் இருந்தவா றிருப்பாய் நெஞ்சே!

அடுத்தவர் கைவிட் டாலும், அன்புடன் அருட் கரத்தைக்
கொடுத்துனைக் காக்கும் வள்ளல் கூப்பிடு கின்றான் எல்லாம்
விடுத்தவன் இச்சையென்றே, விரைந்துவா யாருமுன்னைத்
தடுத்திட மாட்டார்; அன்பே தாரக மான நெஞ்சே !

ஆக்கிடும் பிரமன் ஆகி, அளித்திடும் திருமா லாகி,
நீக்குருத் திரனு மாகி, மறைத்திடு நிமல னாகி,
ஊக்கிநல் லருளைச் செய்யும் சதாசிவன் ஒருவ னாகித்
தாக்கறு தானே யான சம்புவை நம்பு, நெஞ்சே !

கல்லையுந் தெப்ப மாக்கி அப்பரைக் கரைசேர் எம்மான்
கல்லையுங் கனிய தாக்கிக் காட்சியாம் கருணை வள்ளல்
சொல்லையும் செயல தாக்கித் தொண்டர்க்குத் தொண்ட னாக
வல்லவன் வெற்றி யீவான், மயக்கமேன் பேதை நெஞ்சே !

வரம்பெறு வாக்கி னாலே, வான்மழைக் கவிதை யாலே,
உரம்பெறு தவத்தி னாலே யோகமெய் யொளியி னாலே
நரம்பெறு மாந்தர் தெய்வ நலம்பெறத் தொண்டு செய்வாய்;
அரன்பணி யதுவே, ஆயுட் பணிநலம்; அன்பு நெஞ்சே !

பலவினைப் போர்கள் வீறும் படுகளக் கூத்தாம் இந்த
உலகினில் எண்ணி றந்த வுயிர்களுள் ஒருவ னாக
மலவுடல் பூண்டு வந்து மாண்டுபோம் மனித வாழ்வின்
அலமறு நாட கங்கள் ஆடியே அயர்ந்தாய் நெஞ்சே !...

நண்பர்கள் என்று வந்தார்; நண்பரும் வம்ப ராஞர்...
பண்பர்கள் என்று வந்து பணம்பறித் தோடி ஞர்கள்;
தண்பனிமொழியாலீர்த்துத் தணலெனச்சினந்து சென்ருர்...
கண்பனி வாரத் தூய கடவுளைக் கருது நெஞ்சே!...

பரிசனம் உறவு சுற்றம் பாரிசை பதவி பட்டம்
அரசரின் சலுகை என்னும் ஆணவத் தொடர்களெல்லாம்
கரிசன மின்றிச் சென்ற காலையே, காத லிக்க
'அரசன்யான்' என்று நிற்கும் அவனையே நம்பு, நெஞ்சே!

குறைசொல்லித் திருத்து தற்கும் கொற்றவன் ஒருவ னுண்டு;
கறைகளை நீக்குந் தூய கரையிலாக் கருணை யுண்டு;
நிறைபெறும் இன்பம் ஈய நின்னுளே யமுதன் உள்ளான்;
இறைவனவ் வொருவ னன்றி எவர்புகல்?...ஏழை நெஞ்சே!

கள்ளரின் உள்ளும் 'கள்ளேல்' எனச்சொலும் காட்சியாளன்
மெள்ள நம் மனத்தின் சாட்சி யாகவே மெய்மை சொல்லும்
வள்ளலே, வாய்மை யான வாழ்வருள் வரதன்; உள்ளே
உள்ளவன் ஒருவ னன்றி உறுதுணை யில்லை நெஞ்சே!...

இன்றென்றும் நாளை யென்றும் இருவினை யுலகக் காட்டில்
ஒன்றைவிட் டொன்று பற்றி யுழலுவ தேனே நெஞ்சே!
வென்றலை புலனை, ஆசை வேரினைப் பறித்தே, ஞானக்
குன்றென நின்ரு லிங்கே, குறையுண்டோ கூறு நெஞ்சே!

நேசத்தை யூன்றி நன்று நினைத்துளே நிலைத்து நின்றே
பாசத்தை யுருவி நல்ல பதிநிலை பதிய வெண்ணி
வாசத்தை உள்ளமாக்கி வள்ளலை யன்பு செய்வாய்;
மாசற்ற தெய்வ சக்தி வாய்ந்திடும்; வாய்மை நெஞ்சே!

பண்ணறி யாத-பண்ணின் பயனறி யாத ஊரில்
கண்ணறி யாத காட்டிற் கலங்கினை, கவலை நெஞ்சே!
மண்ணறி யாத தெய்வ வழிமனச் சாட்சி யுண்டு;
புண்ணறி யாது முன்செல், புகலுண்டாம் புனித நெஞ்சே!

தாயகக் கருணை பொங்கத் தண்ணருட் சோதி பொங்க
நேயக ஒருமை பொங்க நிலவுயிர்க் கன்பு பொங்க
தூயவர் கூட்டம் பொங்கத் தொண்டுசெய் யாற்றல்பொங்கக்
கோயிலாம் உலகில் இன்பங் குலவிட நலஞ்செய் நெஞ்சே!

வேகமாம் புலன டக்கி வீண்மனப் போக்க டக்கித்
தேகமாம் புரி யடக்கிச் செருக்கினை யடக்கி யாசைப்
போகமாம் பிணி யடக்கிப் பூரண ஞான மோங்கும்
யோகமாம் கலையைப் போற்றி உயர்ந்திடு தெளிந்தநெஞ்சே!

உலகிய லறிவுச் செல்வம், உள்ளிய லறிவுச் செல்வம்
பலகலை யறிவுச் செல்வம், பயிர்வளர் பசுமைச் செல்வம்,
பொலியும்விஞ் ஞானச் செல்வம், பூரண யோகச் செல்வம்
இலகிட முயற்சி செய் நீ எண்ணத்தை உயர்த்தி நெஞ்சே!

அருங்கலை வீர நண்பன், அருவியில் வீழ்ந்து மாண்டான்;
பெருந்தகை யோகி யாக்கை சதமெனப் பேசிப் போனான்;
இருந்திருந் தெழுதினாரின் எழுத்தினைச் சிதல்களுண்ட;
வருந்துடல் ஆட்ட மெல்லாம் மறலிகூத் தறிவாய், நெஞ்சே!

எத்தனை யிடர்க ளிங்கே, எத்தனைப் பிணி துயர்கள்;
எத்தனை வெறி சினங்கள், எத்தனை எத்தர் சூழ்ச்சி,
எத்தனை பகல் வேடங்கள், எத்தனை ஏமாற் றங்கள்;
எத்தனை கொடிய போர்கள்! ஏன் இந்த உலக வாழ்வே?

சாதிப் பொறாமை யாலே சமயப் பொறாமை யாலே
வீதிப் பொறாமை யாலே வீட்டுப் பொறாமை யாலே
பாதிநாள் பாழாய்ப் போன படுகொலைப் பழியை எண்ணி,
மீதிநாள் சிவத்தை எண்ணி விழித்திரு வீர நெஞ்சே!

திருடரைத் துணைவ ரென்று செல்வத்தைப் பறிகொடுத்துப்
புருடனை மறந்தாற் போலப் புவியினில் வருந்தி நின்ற
வருடங்கள் கழிந்த; நல்ல வாழ்வினி வாழ வேண்டின்,
குருடறு சுத்த சக்திக் குருவினை வணங்கு நெஞ்சே!

புத்தகப் புகழோ ? பேச்சுப் புலியெனும் புகழோ? வீடு
சொத்துறு புகழோ? பெண்டிர் சுற்றமோ ? உலக மாயப்
பித்துறு புகழை யெல்லாம் பிணமுறக் கண்டு விட்டோம் ;
சுத்தயோ கத்தை நாடிச் சுகமுறு தூய நெஞ்சே !

பள்ளிகள் கட்டி யென்னே, பலகலை பயின்று மென்னே!...
சள்ளைசெய் யுலகப் போரிற் சரித்திரம் பெற்றும் என்னே !...
பிள்ளைகள் பெற்று மென்னே பிறவியின் பயனி தாமோ ?
வெள்ளையாய் நவிலு கின்றேன் விடுதலை தேடு நெஞ்சே !...

ஏடுகள் குவித்து மென்னே, எழுத்துகள் எழுதி யென்னே,
நாடுறு புகழு மென்னே, நாடக வுலக வாழ்வில்
ஓடுகை வருகை யெல்லாம் ஒருபக லிரவின் ஆட்டம் ;
தேடுக வுள்ளே, தெய்வத் திருவருள் கூடு நெஞ்சே !

வந்தகா ரிய முடித்தே, வராதினி வினை யுதிர்த்தே,
பந்தனை விலகிப் பாசம் படரெலாம் விலகி, யான்ம
சிந்தனை மேவிச் சீவன் சிவமய மாகி, ஈசன்
தந்ததை உலகி னுக்கே தந்துசெல் சாந்த நெஞ்சே !

வான்மழை வறண்ட போதும், வளர்பயிர் வாடும் போதும்,
தேன்மலர் மண்ணும் போதும், தின்னச்சோ றின்றி ஏழை
ஊனுடல் உலைந்த போதும், உற்றவர் பிரிந்த போதும்,
ஏனுடல் எடுத்தோ மென்றே இரங்குவே னிளகு நெஞ்சே !

அயலவர் அழுங்கும் போதும் அழுகுரல் கேட்ட போதும்
புயலிடி வெள்ளத் தாலே புகலிலா தேங்கும் போதும்
துயரநீ ருகுக்கும் போதும் தூற்றுவார் சினக்கும் போதும்
பயந்துநான் பரித வித்த பான்மையை, அறிவாய் நெஞ்சே !

நல்லவர் வருந்தும் போதும் நயவஞ்சக் கள்ளர் கூடி
அல்லல்கள் செய்யும் போதும், ஆத்திர அரக்க ரிங்கே
தொல்லைசெய் கொடுமையாலே சுதந்தர மிழந்த போதும்
பல்லுயிர் பதைத்த போதும் பதறினேன், பாவி, நெஞ்சே !

கோபத்தீ பற்றித் தீயர் கொடுமைகள் இழைத்த போதும்
பாபத்தீ பற்றி வெய்யர் படுகொலை புரிந்த போதும்
ஆபத்திற் சிக்கி, மாந்தர் அலறிடும் போதும், உள்ளே
தாபத்தீ பற்றி நானுந் தவித்ததை யறிவாய், நெஞ்சே !

இளந்திரு நகைச் செருக்கும் ஏறிய தசைச் செருக்கும்
வளந்தரு செருக்கும், செல்வ வனப்புறு செருக்கும், கல்வி
அளந்தநூற் செருக்குமூரை ஆண்டிடும் செருக்கும் எல்லாம்
தளர்ந்தெமன் வாயிற் செல்லும்
தன்மைநீ யறிவாய் நெஞ்சே !

செழித்திடும் வீடு சுற்றம், சேவகர், செல்வக் குப்பை
விழித்ததுங் கண்டு தூக்க விளைவிலே காணமாட்டேன்
அழித்திடுங் கால வேகம் அள்ளியுண் ணுலக வாழ்விற்
செழித்திடும் அருளைச் சிந்தை செய்திடு தெளிந்த நெஞ்சே!

அழுந்திருள் விலக வுள்ளே அருட்பெருஞ் சோதி காணச்
செழுந் திருக் கலைகள் சேரத் தெய்விக ஒளி விளங்கக்
கொழுந்தவக் கனல் வளர்த்துக் குவலயத் தொண்டு செய்ய,
எழுந்திரு ! வெற்றி நல்கும் இறையருள் இனிய...நெஞ்சே !

வஞ்சனை யின்றி மாய வாய்வெடி யின்றிச் சீறும்
வெஞ்சின மின்றித் தூய விழுமிய வுள்ள மோங்கிச்
செஞ்சொலும் கருணை யன்பும் சீரிய செயலும் போற்றுய் ;
நெஞ்சமே, உன்னைப்போல நேயனிவ் வுலகிலுண்டோ ?

நீருயர் பூவும் கையால் நீட்டிட நீள்வ துண்டோ ?
ஏருயர் பயிரும், செல்வர் ஏவிடச் செழிப்ப துண்டோ ?
பாருயர் வாழ்வும் பட்டப் படிப்பினு லாவ துண்டோ ?
சீருயர் உள்ள மோங்கச் செகநிலை உயரும், நெஞ்சே !

அழுகிய பழமும் ஈயா தடுநர கத்தில் வீழ்ந்து,
முழுகிய கிழவி சொர்க்க முன்னிய கதையைப் போலே,
விழுமிய ஈகை யின்றி வியன்பெருந் தியாக மின்றிச்
செழுமிய முக்தி யின்பம், சேருமோ செப்பாய் நெஞ்சே !

ஏனதியான் என்னு மட்டும், இருப்பதைக் கரக்கு மட்டும்,
தனதுதான் தனக்கே யென்னுந் தன்னலம் பேணு மட்டும்,
மனதுறு சினஞ் செருக்கு சிறுமைமா ருத மட்டும்,
மனிதனைய் மதிக்க வாழும், வகையிலை வாழு நெஞ்சே!

செம்மலர் வெண்மலர்கள் செழுமை யாம் பாசிலைகள்
விம்மிடு மீன் கணங்கள் விளங்கிடுங் குளத்தைக் கண்டேன்;
கம்மென மணக்க வில்லை, கயல்புரண் டோட வில்லை;
பொம்மெனும் வண்டு மில்லை.. பொலிவினில் உயிரு மில்லை!

பூவினைக் கொய்யத் தொட்டேன், பூத்தநாண் மலரங்கில்லை;
தாவிடும் ஊற்றுநீரும் தாகத்திற் குதவிடாதே
ஓவிய நிற மயக்கம் ஓவி'தென் றுள்விழித்தேன்;
ஆவிது போலத் தோற்ற வுலகமும், அறிதி நெஞ்சே!

அகத்திரை விலக்கி, நெஞ்சின் ஆணவத் திரை விலக்கிச்
சகத்திரை விலக்கி யான்ம சைதன்ய வொளிதுலக்கி
இகத்திலே பரத்தைக் காணும் இயல்புறு சமயோகத்தின்
சுகத்திலே சுத்த ஜோதி துலங்கிடுந் தூய நெஞ்சே!

கண்மலர் காணச் செய்யுங் கதிரொளிப் பிழம்பைக் காணாய்
விண்மலர் பூத்தவானின் விரிவினை வியந்து நோக்காய்
மண்மலர் பூத்த சோலை வனப்பினை யுவந்து காணாய்
பண்மலருடனே ஜோதிப் பரமனை யுணர்வாய் நெஞ்சே!

அற்புத சக்தியெல்லாம் அளித்திடும் ஆகாயத்தைச்
சிற்பரா சக்தியென்றே சிந்தனை செய்யத் தேராய்;
கற்பெருங் கோயி லுள்ளே கற்சிலை தனைவணங்கிக்
கற்பூரங் காட்டு கின்றாய் கதிரொளி காணாய் நெஞ்சே!

அன்பினால் வளரு கின்ற அருளொளி காணமாட்டார்;
அன்பினால் உணர்ந்து நாளும் அகநெகிழ்ந் துருகமாட்டார்;
துன்பினால் அகந்தை மேவுஞ் சுயோதனக் கும்பல், ஆன்மப்
பண்பினை யறிவதுண்டோ? பயனுறப் பழுத்த நெஞ்சே!

ஆகம வேத சாரம் அனைத்தையும் படித்திட் டாலும்
யோகம தில்லாவிட்டால், உள்ளொளி விளக்க முண்டோ ?
தேகம துதிக்க வுண்டு திரவியந் தேடிச் சேர்க்கும்
போகமதில்லை, தெய்வப் புலமையே, மாண்பு நெஞ்சே !

புலமையின் ஊற்றுன் னுள்ளே புதுப்புதுப் பொலிவு தோன்ற
நலமுடன் எழுந்து பொங்கும், நானது ஒன்ற தானால் ;
இலகுநல் விதய வீட்டில் இனிதிருந் தமைதி கண்டால்,
உலகுயிர் இறைவ னை ஒன்றினை அறிவாய், நெஞ்சே !

கண்ணினைத் திறக்க வந்த கடவுண்மாப் புலவர் சொல்லை
உண்ணினைந் துணர மாட்டார் ; ஒருமையைப் பன்மை யாக்கி
எண்ணிய படி நடந்தே இயல்பினைத் திரித்து நாசம்
பண்ணுவர் உலகையத்தப் பாபத்திற் கிரங்கு நெஞ்சே !

தூயமெய் வழி யுரைக்கும், தூமனச் சாட்சி சொல்லும்
தாயக வுண்மை யெண்ணார், தத்துவச் சண்டை யிட்டே
நேயக வுணர்வில் லாதே நினைத்தவர் மதம்புனைவார்
வாயக மடங்கி நின்றால், வாழ்வினுக் கினிது நெஞ்சே !

மதமெலாம் உதிக்கு முன்னே மகிழ்மனச் சாட்சி சொன்ன
இதமுள வாய்மை யுண்டாம்—எண்ணிலார் அதனை; யாதோ
விதவிதப் பெயரைச் சுற்றி விதவித மதங்கள் செய்தே
வதவதப் பேச்சால் வாழ்வை வதைத்தனர் வாழு நெஞ்சே !

சீவனும் சிவனும் ஒன்றித் திளைத்திடும் அனாதி யின்பம்
யாவரும் உள்ளுணர்ந்தால் இயல்புறு மின்ப மாமே !
தேவரும் தேடும் இன்பம், சேர்ந்திடார் தியானத்தாலே ;
போவது வருவ தாகிப் புவியினர் உலைந்தார், நெஞ்சே !

கடலொடு வானுங் காற்றும் கதிருடன் மழையும் ஆறும்
இடமகல் உலகில் எங்கும் இயற்கையின் அழகுந் தந்த
கடவுளைக் கருத மாட்டார் ; கல்லினிற் சிலை யெடுத்துச்
சடவுருக் கமுது காட்டிச் சாப்பிடு மாந்தர் நெஞ்சே !

கல்லினுங் கடிய நெஞ்சர் காளிபேய் கருப்பன் என்றே
மெல்லிய கோழி யாடு மீன்களைப் பலி கொடுத்துப்
புல்லியற் சுடுகா டான வயிற்றிலே போட்டடைக்கும்
கொல்லியற் பூசை யான கொடுமையிங்கொழிக நெஞ்சே !

சாம்பலைப் பூசிக்கொண்டும், சைவத்தைப் பேசிக் கொண்டும்
தேம்பிடும் உயிர் வதைத்தே உண்பவர், ஜீவ சாட்சி
யாம்பதி யுணர்வில் லாமல் அகந்தையில் அழிந்தழிந்தே
போம்படு குழியில் வீழும் போக்கினை யறிதி, நெஞ்சே !

சைவத்தைப் பேசியென்ன வைணவம் சாற்றி யென்ன?
வையத்து மதநூல்எல்லாம் வரிசையாய்ப் படித்துமென்னே?
செய்யநல் வழிபயின்றால் அன்றிநற் சேம முண்டோ ?
துய்யநல் உள்ள மொன்றே, துணையென நம்பு நெஞ்சே !

எத்தனை வகுப்பு வாதச் சமயங்கள் இங்கே உண்டாம்—
அத்தனை வாதச் சிக்கல் அறியசிற் றறிவா லாமோ ?
இத்தனையென் றளந்த தால்உனக் கியல்வதென்னே !
ஒத்தவுள்ளுணர்விலூன்றி ஒருமைகொள் உண்மை நெஞ்சே

உள்ளமே உண்மை அந்த உள்ளமே கடவுட் கோயில் ;
உள்ளமே உலகம் தூய உள்ளமே உணரும் வேதம் ;
உள்ளமே யோகக் குண்டம்...உள்ளமே குருவின் பீடம் ;
உள்ளமே பற்றி வாழின், உயருவாய் உருகு நெஞ்சே !

வெள்ளத்தால் மலரினீட்டம் வெள்ளத்தாலழகின்வண்மை,
வெள்ளத்தாற் செழுமை யெல்லாம் விளைவது போலே, தூய
உள்ளத்தால் ஜீவ சாட்சி யுணர்வினால் வாழ வேண்டும் ;
விள்ளத்தான் வாயு முண்டோ விரும்பிநீ யறிதி நெஞ்சே !

எவரெதை யியம்பி னாலும், இதயத்திற் கினிதாய்க் காணின்
அவரவர் அறிந் துணர்ந்தே அதன்படி நடத்தல் மேன்மை
புவிதரு நூல்க ளெல்லாம் புந்தியில் அடைத்திட் டாலும்
தவநெறி நில்லாப் பேச்சு சக்கையென் றொதுக்கு நெஞ்சே !

கல்லுடன் மரம் இரும்பும் காரையும் செம்பும் கூட்டிக்
கொல்லரும் தச்ச ரும் கொத்தரும் அமைத்த கோவில்
பல்வகைச் சமயச் சாதிப் பாசறை யாகி யிங்கே
எல்லையில் வகுப்புப் போர்செய் யிடர்களைப் பாராய் நெஞ்சே

தனித்தனிப் பெயரை வைத்துத் தனித்தனி யுருவை நாட்டித்
தனித்தனிக் கோவில் கட்டித் தலபுராணம் புனைந்தே,
தனித்தனிப் பூசை நாட்டித் தனித்தனி மதங்களாக்கித்
தனித்தனிச்சண்டைசெய்தார், தனிப்பிரி வாளர் நெஞ்சே!

இம்மதக் குருக்க ளோடும் இம்மடத் தலைவ ரோடும்
அம்மதக் குருக்கள் சேரார், அம்மடத் தலைவர் பேசார்;
உம் மதம் எம் மதமென் றூர்கெடச் சண்டை செய்வார்;
எம்மத வாதும் இன்றி இருந்தவா றிருநீ நெஞ்சே!

அச்சுறு விழியும் வாளும் அச்சுறு முகமுங் காட்டி,
அச்சுறப் பறைகள் கொட்டி, அச்சுறக் குர லெடுத்தே
அச்சுற ஆடு மாடு கோழிகள் அறுத்துத் தின்னும்
அச்சுறும் அரக்கர் பூசை அஞ்சினேன், அன்பு நெஞ்சே!

கைகட்டி வணங்கி நின்றே கவலைகொண் டிருப்பான், ஏழை;
பைகட்டும் செல்வன், சீறும் பாம்பெனச் சினந்து, நாயைச்
சுய்கொட்டி விடுவா னந்தத் துயரத்தை நினைக்கும் போது
கைகொட்டிக்கண்ணீர்விட்டுச் சலித்ததை யறிதி, நெஞ்சே

உழைத்திட உட லிருக்க உணர்ந்திட மன மிருக்கத்
தழைத்திட அறிவிருக்கத் தணலிடும் வறுமை கொண்டே,
அழைத்திடா வீட்டிற் கேகி அன்னமென் றிரக்கும் பிச்சைப்
பிழைப்பினைக்காணக்கண்ணீர் பெருகுதே பெரிய நெஞ்சே!

தலையிலே சுமையைத் தாங்கி, இடுப்பிலே சேயைத் தாங்கி,
உலைகொதி வெயில் வெதுப்ப ஊர்சுற்றி வருவாள், ஏழை!
விலையிலே கருமிக் கஞ்சர் வீண்வழக் காடி நிற்பார்...
அலையெனத் துயரம் விம்மி யழுங்குவேன், அன்பு நெஞ்சே!

திருவிழாக் கூட்டத் தோடு திருடரும் கலந்து சென்று
மருவியோர் வெள்ளி தங்க மணியணி மூட்டை யெல்லாம்
உருவிடப் பறி கொடுத்தார் உளமுடைந் தலறக் கண்டே
உருகிக்கண் கலங்கி நின்ற உணர்வினை யறிவாய், நெஞ்சே!

சாதுவாய்ப் பிறரை யென்றுஞ் சார்ந்து கைநீட்டிடாது
போதெலாந் தவயோகத்திற் பொருந்திய பெருந்தகையைக்
காதலாங் கதைகள் கட்டிக் கடியபொல் லாங்குரைத்து
வாதுசெய் வம்பர் பக்கம் வந்திடா தொதுங்கு நெஞ்சே!...

வந்திருந் துண்டுடுத்து வந்ததை வாரிக்கொண்டு
நிந்தைசெய் தோடிப் போன நீசரைக் கண்டுகண்டு
தந்திரச் சீடர்செய்த சாகசம் பலவுங் கண்டு
பந்தமே வேண்டா மென்று பார்வையுள் ளாக்கு நெஞ்சே!

வைகுண்டங் கைலையென்று வந்துகை கால்பிடித்த
கைகண்ட சீடர் மாறிக் கலகஞ்செய் தாசான் மேனி
நைவுறப் புடைத்த காதை நடத்தியே வாய்வராத
வைவுரை கூறினரின் வம்பினை யொதுக்கு நெஞ்சே!

உண்டெனச்சோறுபோட்டும் உடையுடன் வீடு மீந்தும்
கண்டெனக் கனிவுரைத்தும், காரியவாத வஞ்சர்
வண்டென வாரியுண்டு வன்மனக் கொடியராகிக்
கிண்டல்செய் தேகினரைக் கிட்டவிடாதே நெஞ்சே !

பேடிகை வாளைப் போலப் பெரியவிஞ் ஞானங் கற்றும்
ஓடிநன் றுழைப்பதற்றே உத்தியோ கத்தை நாளும்
தேடியும் வேலையின்றித் தெருத்தெருவாகச் சுற்றி
வாடிவாய் வேதாந்தத்தை மனையிடம் படித்தான் நெஞ்சே

ஊரிலே பணந்திரட்டி யுண்டது போக மிச்சம்
காரிலே சுற்றிச்சுற்றிக் கட்சிகள் கட்டி மிக்கப்
பேரிலே பதவிபட்டப் பித்திலே மத்தராகிப்
போரிலே யிறங்கு மாந்தர் போக்கினைக் கண்டாய் நெஞ்சே !

விண்ணணி மாடகூட வியன்பெருஞ் செல்வ வாழ்வு
கண்ணணி காட்சியின்பங் கனவெனப் போகக் கண்டோம்
மண்ணணி யுடலேச்சாகா மணியென மாற்ற நின்றார்
எண்ணிலர் புதைகுழிக்கே ஏகினார் எளிய நெஞ்சே!

மண்ணினை வளைத்தபேரும் வழியினையடைத்த பேரும்
புண்ணினை விளைத்தபேரும் பொய்ப்பழி தூற்றுவாரும்
கண்ணினை யவித்தபேரும் கரும்பெரும் பாம்பை விட்டுத்
திண்ணெனச் சிரித்தபேரும் திகைத்தனர் தெய்வ நெஞ்சே!

தியானத்தி லெழுந்த வாக்கை ஞாலத்திற்குதவி செய்ய
மோனத்திலெழுதி யந்த முழுமுதற் கவிதை கற்க
மானத்திற் சிறந்த தொண்டர் வந்தனர்—அவரைத் தூற்றும்
ஈனத்தர் நடையைக் கண்டே இரங்கினை ஏழை நெஞ்சே!

வஞ்சப் பொறாமையாலே வைதுன்னைத் தூற்றிப் பாலில்
நஞ்சினைக் கலந்து தந்தார் சூழ்ச்சியை நலித்துன் உள்ளே
அஞ்சலென் றபயமீந்த அருளினைக் கருதி நாளும்
தஞ்சமென் றடைந்து சுத்த சக்தியை வணங்கு நெஞ்சே!

மாதரை ஏவிவிட்டும் மல்லரை ஏவிவிட்டும்
பாதகர் படுக்கையின்கீழ் பாம்பினைச் சீறவிட்டும்
காதகக் கடிதம் விட்டும் கடுவிடந்தன்னை யிட்டும்,
வேதனை தீர்த்த தெய்வ வேந்தனை நினைவாய் நெஞ்சே!

தாய்பரா சக்தியென்றே தவத்திருவாரைப் போற்றும்
சேயினைத் தூற்றிச் சேட்டை செய்தனர் பகைவர்—அந்த
நோயெனைத் தாக்கிடாது நூறுநல் லாண்டு வாழக்
காயகற்பங்களீந்த கருணையை வாழ்த்து நெஞ்சே!

கலகமே யியல்பதான கலதியர் சூழ்ச்சி யென்னே!
பலமுள தனிமை தந்து பழுத்தது ஞானமாக!
உலகிசை வேண்டேன் இந்த உள்ளத்தில் உள்ள ஒன்றை
நலமுறக் கூடிவாழ நாடினேன் அறிவு நெஞ்சே!

பண்டமோர் திருடன் கொள்ளப் பழியொரு பக்கம் போட்டே,
அண்டையோர் ஏழை தன்னை அரசுகா வலர் பிடித்தே
தண்டனைச் சிறை யடைக்கும் தயவிலாக் கொடிய காட்சி
கண்டுகண் டுளங்கரைந்தாய் கனலிடு வீர நெஞ்சே!

கட்டிய கணவன் வேறு கண்வலை மாய வீச்சிற்
பட்டினைத் திடவே, நன்மை பகன்றிடு மனைவி நோக
எட்டியே தள்ளித் தாலி எடுத்தினும் ஓடு கின்ற
மட்டியைத் திருத்த ஓடி வருந்தினை தூய நெஞ்சே!

அண்டைமற் றொருவ னோடே ஆசைகொண் டலையும் கள்ளி,
கண்டிக்குங் கணவ னுரைக் கள்ளனோடெழுந்து சீறிச்
சண்டையிட் டலறப் பெற்றோர் தாமும்வந் தலறித் தூற்றக்
கண்டுகண் ணீர்உகுத்துக் கலங்கினை கற்பு நெஞ்சே!

கல்விகற் றிடுவாய் என்று கடன்பட்டே யுதவுந் தந்தை
சொல்லினை மதியாத் தீய தோழரோ டழியும் பிள்ளை,
பல்கலைக் கழகம் வைத்த பரீட்சையிற் குழி பறித்தான்;
அல்லற்பட் டன்னை தந்தை அழுதிட நொந்தாய் நெஞ்சே!

கூழினுக் கேழை மக்கள் கூக்குரல் இடுமிந் நாட்டில்
ஏழையின் இரத்தச் செல்வம் எனதெனப் பூட்டிச் செல்வர்
தோழரின் விருந்தி னுக்கும் சொகுசுறு மாதருக்கும்
பாழிலே கொட்டக் கண்டு பதறினை ஏழை நெஞ்சே!

ஆசைப்பேய்க் கிடுவார் தீய அழிவழக் கிடுவார், கொஞ்சும்
வேசைப்பேய்க்கிடுவார்செல்வர்விருந்தினுக்கிடுவார் பற்றும்
பாசமாப் பாடல் ஆடல் பகட்டினுக் கிடுவார் மாந்தர்;
மாசறு பணிகள் என்றால் மனைக்குளே ஒளிவார், நெஞ்சே!

பேர் புகழ் பட்டம் சட்டம் பெருமைசேர் பதவிக் கீவார்;
தேர்தலுக் கிறைப்பார்; பக்காத் திருடருக் கஞ்சி யீவார்;
ஊர்வருமானி போடும் உயர்வரிக் கீவார், வெய்ய
போர்களுக் கீவார், தெய்வப் புண்ணியர்க் கீயார் நெஞ்சே!

வரிப்புலிக் கிடுவார், மன்ற வழக்கினுக் கிடுவார், வீட்டை
அரிப்புலிக் கிடுவார், ஆசை அகப்புலிக் கிடுவார், வஞ்ச
நரிப்புலிக் கிடுவார், தூய நற்பணிக் கிடுக வென்னில்,
எரிப்புலி யாவார்; மாந்தர் இயல்பிது காணாய் நெஞ்சே!

ஆளெலாம் உலர்ந்து வெந்தே, அறிவுடன் பொருளுந்தேடி
நாளெலாம் கல்வி கற்று நலிந்தநல் லிளைஞன் வாழத்
தாளெலாந் தேய்ந் தலைந்தும், தக்கதோர் வேலை யின்றி,
'மாளலாம்' என்ற போது வருந்தினை மயங்கு நெஞ்சே!

பாடுபட் டருமைப் பிள்ளை படித்திட வீட்டை விற்றார்;
ஆடுமட் டையுடன் சட்டை யணிந்துமோட் டாரில் வந்தான்;
கூடிமின் னாளைக்காளை குடித்தனம் தனியே வைத்தான்;
வாடுதாய் தந்தை பட்ட வறுமைநோய் அறிவாய் நெஞ்சே!

தாவெனக் கொண்டுபோவார்; தந்ததைத் திருப்பித் தாரார்,
வாவென, ஒட்டிக் கொண்டு வளத்தினை வாரிக் கொள்வார்;
போவெனப் போகா ரின்னும் பொருளினை சுரண்டுவார்கள்
நோவன சூழக் கண்டு, நொந்தனை நுட்ப நெஞ்சே!

பொய்வளர் நூலைக்கற்றுப் புத்தகப் பூச்சி யாகித்
துய்யவர் அருளும் வாக்கைத் தூற்றிநன் னெறியிலாது
கையிலே காம நூலும், வாயிலே கனல் சுருட்டும்
பையிலே சீட்டு மாகப் பாழ்பட்டார் பதகர், நெஞ்சே!

பீடிகை போட்டு மாதம் பெருந்தொகை விழலுக்கிட்டுப்
பீடிகை யுடன் இடம்பப் பெருமைகள் பேசி, வேலை
தேடியும் இன்றி வந்த திருவையும் உதறித் தள்ளி
வாடியே வருந்து கின்ற வாலிபர் பலர், என் நெஞ்சே!

வழியினைத் திறந்து, வாழும் வகையினை யளித்தான் வள்ளல்;
வழியினை யடைத்து,மண்ணை வளைத்தெனதெனதேயென்னும்
பழியினைச் சுமந்தா ரோடு பழகினை; பழவினை செய்
அழிவினை விட்டுன் னுள்ளே அருளினைத் தேடு நெஞ்சே!

எதுநலம் என்று தேருர், இதயத்தில் அன்பும் இல்லார் ;
பொதுநலம்எனமுனைந்து, பொதுசனப் பொருளைச் சேர்த்து,
புதுநலம் என்றே தங்கள் பெயரினைப் பொலிய நாட்டி
இதுநலம் எனதே யென்பார் இயல்பினையறிவாய்,நெஞ்சே !

வாடிய பயிரைக் கண்டு வாடினேன்—என்று வள்ளல்
பாடிய பாட்டைக் கொண்டு பலமுறை கூச்சலிட்டு
வாடிய முகத்தைப் பார்த்தும், "வள்"ளென விழுந்த மாந்தர்
கூடிய உறவால் என்ன கொண்டனை? பேதை நெஞ்சே !

அச்சிலும் மேடை மீதும் ஆள் பகட் டாடி, நாடு
மெச்சிடப் பேசி மிக்க மேட்டிமை காட்டுமாந்தர்
உச்சியிலேறிக் கீழே 'ஓருதய' வென்ற போது
'சிச்சி'யென் ருேரை நம்பித் திரிந்ததேன், மூட நெஞ்சே ?

நல்வர வேற்புத் தந்து நற்சுவை விருந் தளித்துப்
பல்வகை யாடல் பாடல் அழகுடன் பணம் இறைத்த,
செல்வனுக் கமைச்சர் சிங்கம் செலவுடன் வரியும் போட்ட
அல்லலைச் சிரிப்பதா, பின் அழுவதா? ஏழை நெஞ்சே !

வாயிலே புகைச் சுருட்டும், மனதிலே புனைச் சுருட்டும்,
சேயிலே தலைக்கிறுக்கும், செய்கையிற் பாய்ச் சுருட்டும்,
ஓய்வறு பணச் சுருட்டும், உரையிலே திருட் டுருட்டும்
தோயுமிவ் வுலக நட்பைச் சுருட்டிவை ; தூய நெஞ்சே !

சேலைதுவைத்து நாளும் சமையலுஞ் செய்து சுற்றும்
ஆலையிற் கரும்பும் ஆனுன் அலுவலொன் றீவா ரென்றே
வேலை யென்றதுவும், போடா வெள்ளென விழுந்த செல்வர்
வாலைநீ பிடிக்கா தான்ம உரிமையில் வாழ்ந்தாய், நெஞ்சே !

அணங்கினை மணந்த பின்னர் அண்ணனுமாறிப்போனுன் ;
இணங்குமா ணவனு, மெம்மே எம்மென எம்பிச் சென்ருன் ;
பணங்கனி நண்பர் தாமும் பார்த்தினும் பாரா தானுர் ;
கணங்கரு தாதுன் ஆன்மக் கருத்துடன் வாழு நெஞ்சே !

தண்ணருள் கொண்ட தீர்க்க தரிசிகள் வந்தால் என்ன ?
பண்ணரு ளாளர் இங்கே பாமழை பொழிந்தால் என்ன ?
கண்ணருள் கனிய வில்லை, கவலையிங் கொழிய வில்லை ;
மண்ணிருள் போகவில்லை, மனவிருள் அகற்று நெஞ்சே ;

புண்ணியம் கேளோம், என்றும், பூசனை புரியோம்-தெய்வம்
உண்மையென் றுரைக்கின் றீரே, உத்தம யோகி யாரே !
வண்மையோ டிரண்டு வேளை வகைவகை யுணவு தந்து,
கண்ணெதிர் காணச் செய்வீர், கடவுளை யென்பார், நெஞ்சே!

அருவமாம் கடவுளை "நாம் ஆய்குழாய் அமிலத்தே நல்
உருவமாய்க் காண வில்லை உள்ளதும் இல்லை" யென்பார் !
பரும்பொரு ளறிஞர். தூய பரம்பொருள் உணரமாட்டார் ;
கரும்பினைச் சுவைப்ப தார் இக் கலை ஞருள்? அறிதி, நெஞ்சே!

கலகஞ்செய் குண விகாரக் கடற் புயல் வீசு கின்ற
உலகினைத் திருத்து முன்னே, உன்னை நீ திருத்தித் தூய
நிலையிலே, சுத்த சக்தி நினைவிலே, யோக சித்திக்
கலையிலே, பயின்று நாளும் கவலையற் றிருப்பாய் நெஞ்சே!

தீங்கனிச் சோலை சூழச் செழும்பசு வயல்கள் சூழ,
ஓங்கிய மலைகள் சூழ, ஓமிசை யருவி சூழப்
பூங்குயி லோசை சூழப் புன்னகை மலர்கள் சூழப்
பாங்குடன் இயற்கை யின்பப் பரவசத் துலவு, நெஞ்சே !

தெள்ளிய புனல் செழிக்கத் தீங்கனி மரஞ் செழிக்கப்
புள்ளிசை வனஞ் செழிக்கப் பூங்குழல் வீணை யோசை
உள்ளிசை யுடனே கூடி ஓமிசை முழங்கும் இந்த
வள்ளலின் யோகக் காட்டில், வளருவாய் ஜோதி நெஞ்சே !

பூவினைச் சுற்றி, நல்ல புகழ்பொலிந் திடப்பெற் றாலும்
நாவினித் திடவே பாட்டு நயம்பெறப் பாடி னாலும்,
சாவினை மாற்ற லாமோ ? சஞ்சலந் தவிர்க்க லாமோ ?
போவுளே, சமயோகத்தைப் புரிந்தமு துண்பாய், நெஞ்சே !

தன்னலந் துறந்த தீரர் சத்திய தரும வீரர்,
உன்னத யோக சித்தர், உள்ளன்பு கொண்ட சீலர்
மன்னுலகுயிர்த் துடிப்பே தன்னுயிர்த் துடிப்பதென்பார்
இன்னிய உறவை நாடி இனிதிரு தூய நெஞ்சே!

நிலையமாச் சிரம மென்னே! நிர்வகச் சிரம மென்னே!
இலை துணை; வருவோர் போவோர் எமதுயாம் என நடந்தார்
அலையலை, வீணே; சுத்த சத்தியின் அருளை நாடி
நிலையுன துள்ளே; யந்த நிலைநிலை நிலையென் னெஞ்சே

தனியனேன், எனையறிந்து தருபவர் யாருமில்லேன்
சனியனும் அதிட்டக்கட்டை; தந்திரமறியேன், ஏழை
பனிவெயில் பாராதெங்கும் பட்டினியோடலைந்தேன்
இனியனும் ஒருவனுண்டே இறைவனும் அறிதி நெஞ்சே!

வரங்கிளர் வாக்கிற் பூத்த மலர்களை வாரிவிட்டு
நரங்கிளர் புகழை வேண்டாத் தனிமையை நாடி நின்றேன்
உறங்கிடா துழைக்கும் பேறுமுனையிலே வாழுகின்றேன்
இரங்குவாரின்றி யென்னை யிறைவனுக் கீந்தேன் நெஞ்சே!

யாரிடம் உதவி கேட்பேன் எவரெனை அறிவாரிங்கே?
பேரிடம் அறியேன் என்மேற் பிரியம் வைத்துதவுவாரும்
ஓரிடங் காணேன்; இங்கே உதித்ததை எழுதிவைத்துப்
பாரிடம் விடைபெற்றேகப் பணிநலம் பூண்டேன் நெஞ்சே

செல்வரைக் காணவில்லை செல்வாக்குமில்லை யிங்கு
பல்வகை நிலையங்கட்டிப் பார்க்கவும் நேரமில்லை
ஒல்வகை யறிவைத்தந்திவ் வுலகமென் எழுத்தைக்கண்டு
நல்வகைத் தொண்டு செய்ய நம்பினேன் இன்ப நெஞ்சே!

நாடியுந் தளரப் பேனா நாட்டியே எழுதி நாளுந்
தேடிய பொருளினாலே பொதுநலச் சேவை செய்தேன்
பாடிய பாட்டை யிந்தப் பார்நலம் பெறவே தந்தேன்
வீடிய லறிந்து கொண்டேன் விடுதலை யடைந்த நெஞ்சே!

எத்தனை யெத்தர் வந்தார்! எத்தனை சித்தர் வந்தார்
எத்தனை புலவர் வந்தார் எத்தனை அறிஞர் வந்தார்
எத்தனை தலைவர்வந்தார் என்னினும் எனக்குவந்தான்
ஒத்தெனதுள்ளத்தே வாழ் ஒருவனே ஒருமை நெஞ்சே!

சீடரைக் கூட்டி வைத்து தெய்வமென்றிசை முழக்கி
ஆடம்பரங்கள் செய்தார் ஆயிரம் குருமார் கண்டேன்;
மூடரை மயக்கும் வித்தை முயன்றவர் புகழுங் கண்டேன்
தேடரு சுத்தசக்தித் தெய்வமே உய்வு நெஞ்சே!

உலகெலாம் சுற்றிச் சுற்றி உயர் புலவோரைக் கண்டேன்
பலபல நூல்கள் கற்றுப் பார்த்தனன் எனினும், இங்கே
இலகுறும் எட்டுச் சித்தர் எனக்குறு துணைவரானார்
மலரடி வணங்கி அன்னார் மாண்பினை வாழ்த்து நெஞ்சே!

பூரணச் சித்தர் ஐயர் புனிதமா ஞானசித்தர்
ஆரண ரமண சித்தர் அரவிந்த சித்தர் வாழ்க!
ஏரொளிர் சாயிமேஹர் இமாலயச் சிவனார் வாழ்க
பேரொளிர் சித்தர்நாமம் பேசிடு பெரிய நெஞ்சே!

விடத்தகு பொருளை விட்டாய் வியத்தகுதுறவு பூண்டாய்
படத்தகு பாடுபட்டாய் படித்ததைப் பார்த்துக் கொண்டாய்
நடத்தகுவிதையை நட்டாய் நல்லறிவினை வளர்த்தாய்
திடத்தகு திண்மை பெற்றாய் சென்மமுய்ந்ததுவே நெஞ்சே

பழுதறு நிட்டைகூடிப் பார்த்துளே பரஞானத்தை
எழுதியிவ் வுலகிற்கீந்தாய் இவ்வுலகெல்லாம் கண்டாய்
தொழுதனை உள்ளத்தானை சுத்த ஓம் சக்தி யென்றே
முழுதுறு கடனைத் தீர்த்தாய் முத்திபெற்றுய்வாய் நெஞ்சே!


எண்ணிட எண்ணமில்லை இயற்றிடச் செயலுமில்லை
பண்ணிய பயிர் விளைந்து பகுத்துண்டு மகிழ்ந்து விட்டாய்
மண்ணிடையினிப் பிறப்பு வருவதற்கிடமும் இல்லை.
விண்ணணி விளக்கிற்கூடி விளங்கிடு வெற்றி நெஞ்சே!

யாரையும் கெஞ்சி டாமல், யாரையும் அஞ்சிடாமல்,
பேரையும் புகழையும் வீண் பேச்சையும் விரும்பிடாமல்,
வேரை நன் ருக ஊன்றி, விதையை நட் டுயிர் நீர் வார்த்துப்
பாரைப்பா ராது பார்ப்பான், பதவிசேர் பழுத்த நெஞ்சே!

ஆண்டவன் அளித்த வாக்கால், ஆண்டவன் புகழே பாடி,
ஆண்டவன் அருளைக் கூடி, அவன்மய மாகும் இன்பம்,
வேண்டி நன் றெய்தி, வேறு வேண்டறு நிலைபெற் ருேங்கித்
தாண்டுக பிறவி தன்னை ; தன்னிலை யறிந்த நெஞ்சே!...

வேகமாய்ச் செல்லும் கால விமானத்தில் ஏறி, இங்கே
யோக சமாஜங் கண்டே, உத்தமர்க் குனது சக்தி,
தாகமுந் தந்து, தாகந் தணித்திடும் அருளைத் தந்து
தேகமுந் தேகி யாகத் திரிந்திடு, தெய்வ நெஞ்சே!...

நேரிய யோக வாழ்வு நிகழ்த்தும்போ தெனக்குவாய்ந்த
சீரிய அனுபோகத்தைச் செப்பிடு நெஞ்சமாலை
கூரிய ஒருமை கொண்டு குறிப்புறக் கற்ருேர் தாமும்
பாரிலே பரம ஞானப் பதிநிலை யடைவார் நெஞ்சே!



# தனிப் பாடல்கள்

(இப்பாடல்கள் எழுந்த வரலாற்று விளக்கம் எல்லாம் ஆத்ம சோதனையிற் காண்க.)

### 1. மீனுட்சியருள்

அம்மா பரதேவி தயாபரியே
சும்மா வுலகின் சுமையாக விரேன்
எம்மாத் திரமுன் பணியிங் குளதோ
அம்மாத் திரம் வைத் தடிசேர்த் தருள்வாய்.

### 2. வரமீந்தாள்

போவென்று மாமன் புறமொதுக்க மீனுட்சி
வாவென் றரிய வரமீந்தாள்—பாவமுதை
ஊட்டினுள் உள்ளம் உருக்கினுள் உய்திபெறக்
காட்டினுள் அன்புக் கலை.

### 3. அன்னை அழகு

காலை யழகோ கலையழகோ கண்குளிரும்
மாலை யழகோ மலையழகோ—வேலையிலே
ஆடும் அழகோ அருளன்னை யென்னுள்ளே
பாடுங் குயிலான பண்பு.

### 4. யோகத்தமர்வாய்.

மூலக் கனலே முதிய வுலகாளுங்
காலக் கனலே கவிக்கனலே—ஆலழகன்
பாகத் தமர்ந்த பரம சிவக்கனலே
யோகத் தமர்வாயென் னுள்.

### 5. மொந்தையுரு

சிந்தைக் கினிய சிறுகிளியே, என்றலைமேல்
எந்தப் பரமன் எழுதினுன்—மொந்தையுருத்
தள்ள முடியாது தள்ளாடி னேன்; இயற்கைப்
பள்ளியிலே நான்படிக்கப் பார்.

### 6. பிரப்பம் பழம்

பின்னம் புறத்தே பிரப்பம் பழம்வாங்கிக்
கன்னஞ் சிவக்கக் கனிவாங்கி—இன்னும்
மறவா வசைவாங்கி வந்தேன் சிவகுருவே
பிறவாக் கனிமொழியைப் பேசு.

### 7. தெய்வசிகாமணிப் புலவர்

தெய்வ சிகாமணியே தீந்தமிழ்க் கற்பகமே
செய்யபழ நூல்சொன்ன தேன்வாயா—வையத்தில்
ஏடுபல நாளும் எழுதிக் குவித்ததுநீ
பாடுபா டென்ற பரிசு.

### 8. என்னுள் நீ

கன்னித் தமிழமுதைக் கம்பர் சமாதியிலே
உன்னிப் புடனளித்த வுத்தமனே—மின்னுடல்ம்
வெட்டுண் டிறந்தாயோ வித்தகனே என்னுளுனை
இட்டுண்டு வாழ்ந்தாய் இனிது.

### 9. பெண் சக்தி

பெண்ணாக வந்த பெரிய தவக்கனலே
பண்ணாகப் பொங்கும் பரசுகமே—புண்ணாகும்
ஆசை வலைப்பட் டழியாதுன் ஆனத்தப்
பூசையென வாழ்வைப் புரி.

### 10. மனமடங்கப் பாடியது

மத்த மாமத யானையைப் போலே
மதுவருந்திய மந்தியைப் போலே
கொத்தராவின் கொடுவிடம் போலே
கூரை பற்றிய கொள்ளியைப் போலே
மொத்தலை புரளும் புயல் போலே
மோகங்கொண்ட முதலையைப் போலே
பித்தலை மனப் பேயலை யாதே
பிள்ளை யைத்தடுத் தாள்பர தேவி.

## 11. இயற்கை வாழ்வு

உடலை யுன்மணிக் கோயிலென் ருக்கி
 உயிரை யுன்னரு ளோங்குரு வாக்கி
அடலரிய மனதை யடக்கி
 அருட் பணிக்கு நிலைக்கள மாக்கி
கடலும் வானமும் காற்றும் கதிரும்
 கடமைகாக்குங் கருத்தை யறிந்தே
இடமகல் உலகில் இனிதோங்கும்
 இயற்கை வாழ்வினை ஈந்தருளம்மே.

## 12. திருமண மறுப்பு

பெண்டாட்டி கட்டிப் பெரிய புலவர்படுந்
திண்டாட்டங் கண்டோமே தேசமெல்லாம்—தொண்டர்
துணைவா துணைநீயித் தொல்லைசெயுங் காமக்
கணைவாரா தென்னருகே கா!

## 13. என்னை வளர்த்த

என்னை வளர்த்தநல் இல்லமே செல்கின்றேன்
பின்னை யுலகுன் பெயர் சொல்ல—மன்னுதவம்
செய்வேன் சிவகதியே சேர்வேன் அருள்பாடி
உய்வேன் உறவினருக் கோது.

## 14. துள்ளு மனம்

வெள்ளி மலையப்பா வெள்ளக் கடலப்பா
வள்ளி முருகப்பா வானப்பா—துள்ளுமனந்
தீதப்பா வாதப்பா சாதப்பா நீயன்றி
ஏதப்பா நாதியெனக் கே.

## 15. குடும்பக் கலகத்தில்

குடும்பக் கலகத்திற் குண்டடிகள் வாங்கி
யிடும்பைப் படுமண்ணு எண்ணிப்பார்—கடுஞ்சிறையாம்
கூட்டுக் கிளிக்குண்டோ கூடியா டித்திரியும்
காட்டுக் கிளியின் களிப்பு.

### 16. ஒட்டும்பிணி

ஒட்டும் பிணிதுயரும் ஓயாத தொல்லைகளும்
பட்டடிமை யாகப் பயில்வேனோ—கட்டுகளை
வெட்டி யெறிந்து விடுதலைப் போர்முரசு
கொட்டிக் குதிக்குங் கவி!

### 17. பித்துண்டு

பித்துண்டு மாயப் பிணியுண்டு வெவ்வினையால்
மொத்துண்டு காம முயக்கினிலே—தொத்துண்டு
கட்டுண்டு குட்டுண்டு கண்ணீர் விடுவேனோ
நட்டருளைப் பாடுகின்ற நான்.

### 18. உத்தியோக மறுப்பு

வேலைப் பிடித்திசைக்கும் வீரக் கவிமற்றோர்
காலைப் பிடிக்கக் கடவேனோ—ஞாலத்தே
அன்பும் அறிவும் அருட்பணியுங் கொண்டென்றும்
இன்புற லேயென் னியல்பு.

### 19. பசியெடுத்தால்

அன்னை பரதேவீ, ஆறுப் பசியெடுத்தால்
உன்னையுங் கேளேன் உழைத்துண்பேன்—என்னை நீ
பெற்ற பயனே பிறவாப் பெருமைபெறு
நற்றவமே யாகுமதை நல்கு.

### 20. மேற்கும் கிழக்கும்

மேற்கும் கிழக்கும் விளங்குங் கலைவாழ்வை
ஏற்கும் இனிய நலமாமே—ஆர்க்கும்
விஞ்ஞான ஆசிரியர் வேலைக்குப் போமனமே
மெஞ்ஞானச் சீரோங்கு மே.

### 21. ஆபத்து

ஆராய்ச்சிக் கூடத்தில் ஆபத்து வீறிட்டுப்
பாராயிப் பார்வாழ்வை என்றதுவே—நேராக
எச்சரிக்கை செய்யும் இரத்தத் துளிகளினால்
உச்சக் கவிக்குயிரை ஊட்டு.

### 22. என் சாதி சமயம்

மனிதச் சாதியென் சாதி
மனச்சாட்சியென் சமயம்
புனிதக் கோயில் உலகெல்லாம்
பொங்குமுயிர்க் குலங் கடவுள்
அனைவருக்கும் அன்பிசைக்கும்
அருட்பணியே வழிபாடாம்
எனதின்பம் எல்லாரும்
இன்புறலென் றறிவீரே!

### 23. எத்தனையோ

எத்தனையோ சாதிமதம் எத்தனையோ கோயில்கள்
எத்தனையோ புத்தகங்கள் இவ்வுலகில்—எத்தனையோ
போதகர் வந்து புகன்றுந் திருந்தாத
பாதகரின் போர்வெறியைப் பார்.

### 24. ஆரணமும் பூரணமும்

ஆரணம் படித்துமென்னே ஆகமம் பயின்றுமென்னே
காரணங் கண்டுமென்னே கருத்துறத் தெளிந்து நின்று
பேரணு வானபூவிற் பெயர் உருப் பேத மற்ற
பூரணங் கண்டபேரே புலவரென் றிலகுவாரே.

### 25. புலவர் காட்சி

பாட்டாலும் உரையாலும் பயன் மிகுந்த
பைந்தமிழைப் பயின்று நாளும்
ஏட்டாலும் எழுத்தாலும் இனிய கனி
மொழியாலும் இயம்பி நாளும்
காட்டாறு போலுதவும் கலையின்பப்
புலவர்களைக் கண்டபோதென்,
வாட்டமெலாம் இளவேனில் வந்ததெனத்
தீர்ந்துபுது வாழ்வதாமே.

### 26. வள்ளல் வாழ்க!

பாரிற் பலகலையும் பண்பாடும் ஓங்கிடவே
வாரிக் கொடுக்கின்ற வள்ளல்கள்—ஊரிலே
மாங்கனித் தோப்பென்ன மங்கலமாய் வாழியவே
நீங்காத செல்வம் நிறைந்து!

## 27. காந்தி சிறையுண்ட நாள்

அண்ணல் சிறையி லடைபட்டார் என்றதுமே
திண்ணென்று நெஞ்சம் திகைத்ததுவே—உண்ணேன்
உறங்கேன் அலுவல் உதறியே பற்றை
துறந்தேன் சுதந்தர ஞனேன்.

## 28. பாத்தி பிடித்துப் பிழை

கற்க வழியில்லை கற்ருலும் வேலையில்லை
நிற்க நிழலில்லை நிந்திக்காச்—சொற்களில்லை
சாத்திரமுங் கல்லாத சாதியபி மானியே
பாத்திபிடித் துப்பிழைக்கப் பார் !

## 29. என்ன புண்ணியம்

வாதவூ ரடிகள் போல வாழ்த்திட வாக்கு மில்லேன்
யாதமே பற்றி வாழப் பத்தியும் பணிவுமில்லேன்
காதலாம் ஆழ்வார் போலக் கதறிட மனமுமில்லேன்
பூதமெய் தாங்கியென்ன புண்ணியஞ் செய்திட்டேனே !

## 30. என் சமயம்

சித்தமே கோயிலாகச் சீவனே தெய்வமாக,
சுத்தமே கொள்கையாகச் சுதந்தர சமயோகஞ்செய்
பத்தியும் அறிவை நல்கும் பணியுமென் வாழ்வதாக
நித்தியம் கவிதை செய்யும் நியமமென் சமயமாமே

## 31. பித்தன்

புத்துலகப்பித்தன் புதிய கலைப்பித்தன்
ஒத்துலகு வாழொருமைப் பித்தனேன்—சத்தமிலா
ஏகாந்தப் பித்தன் எழுத்தோயாப் பித்தன் சம
யோகாந்தப் பித்தனென ஓது.

## 32. காணீர்

உள்ளிருந்து வாழும் உலகால யப்பித்தன்
தெள்ளறிவுத் தேனைத் தினந்தினமும்—அள்ளிவிடும்
பேனு முனைப்பித்தன் பேசாக் கவிப்பித்தன்
நானு ரெனக்காணீர் நன்று.

### 33. வீணா?

காவணம் விட்டுக் கரிய நிசியினிலே
கோவணம் கட்டிக் குணுக்கென்றே—யாவருமே
காணாத் தனிவழியே காடுமலை சுற்றியது
வீணா? மனமே விளம்பு.

### 34. நீயே யிதயம்

மனமதே மனைவியாக எண்ணமே மகவதாக
வினையுல கில்லமாக விடுதலை தேடித் தேடித்
தினமொரு நிலையமாகத் திரிந்தனன் அறிவு சேர.
எனதுளத் திருந்து நீயே யிதயமென் றியம்பினாயே!

### 35. ஊரிலேன்

ஊரிலேன் கருவூர் என்பார் உறவிலேன் உலக வீட்டில்.
காரிலே கலந்தமின்போற் கடவுளைக் கூடி வாழ்ந்தேன்
யாரெனை யறிவாரிங்கே எவருடன் பேசலாகும்
யாரிலே பொழிந்து விட்டுப் பளிச்செனச் செல்கிறேனே.

### 36. வானக்குடை

வானக் குடைநிழலில் வட்ட வுலகத்தே
நானெனவோ ரான்மா நடமாடும்—ஊனுடலம்
தாங்கியதே னென்றேன் தானொ தன்னமுதம்
ஈங்கறிவா யென்றானென் னுள்.

### 37. கண்ணியமாய்

கண்ணியமாய் வாழ்ந்து கடமை நிறைவேறப்
புண்ணியனே யுன்னைப் புகலடைந்தேன்-மண்ணுடலில்
எண்ணி யெழுதி யியற்றியது நின்னருளே
கண்ணாரக் காணுங் கதிர்.

### 38. எல்லா வுலகம்

எல்லா வுலகும் எனது மனையாகி
எல்லாரும் என்னவராய்த் தன்னவராய்—எல்லாரும்
எல்லார்க்கும் வாழும் இனிய சமயோகச்
சொல்லான சொல்லே துதி.

## 39. இணைத்தானை

சுத்தான்ம ஞானச் சுடரை யளித்தானை
ஒத்தியற்கை தன்னில் உயிர்த்தானை—சுத்த
இதயத்தில் மேற்கும் கிழக்குமிணைத் தானை
உதயக் கதிரவனை ஓது.

## 40. கனியின் விதை

மின்னுடலே மின்னுயிரே மின்வாழ்வே யிங்கின்னும்
என்ன வினையுண் டியற்றவே—தன்னந்
தனியே யெழுதியதைத் தந்தா யுலகுக்கே
கனியின் விதைமுளைக்குங் காண்.

## 41. பந்தவினை

சிந்தை சிவமாகிச் செயலுந் தவமாகி
வந்த வினைமுடித்து வாழ்மனமே—இந்த மண்
வந்தனையும் நிந்தனையும் வாழ்த்தும் வசையுமாம்
பந்தவினை யைநீக்கப் பார்.

## 42. அன்பருளாய்

மறைக்கதவைப் போலென் மனக்கதவை நீயே
திறக்கவழி செய்வாய் சிவனே—உருக்கமுடன்
உன்னையே நான்காண வுள்ளம் ஒளிகாண
அன்னையப்ப னேயருளாய் அன்பு

## 43. இயம்பு

சீட்டும் புகையிலையும் சிற்றின்பத் தில்லாறுப்
பாட்டும் பழிப்பும் பரதாரக்—கூட்டுடனே
வாழ்வைச்சூ தாடும் மனிதர் திருந்துவழி
ஏழுமலை யானே யியம்பு.

## 44. அச்சகம்

படக்குப் படக்கென்று பாய்ந்தடிக்கு முள்ளே
நடக்கும் ஒருபொருளின் நாடகமே—நடிக்கின்ற
இச்சகமும் அச்சகமும் எச்சகமும் சிற்சக்தி
உச்சவிளை யாட்டென் றுணர்.

## 45. ஏழைபடும் பாடு

கந்தை யுடுத்திங்கே கஞ்சிக் கலைகின்ற
இந்த மனிதர்களை ஏன் படைத்தாய்?—எந்தை நீ
தந்த வுடலாலே தாளாண்மை வேளாண்மை
முந்துசெயச் சொல்லன் முறை.

## 46. கள்வர் எல்லாம் கவர்ந்த போது

கள்வராய் வந்து கனிமொழிகள் பேசிக்
கொள்ளை யடித்த குறைபேசேன்—வெள்ளிமலை
அப்பா நினதருளே யானந்தச் செல்வமெனில்
இப்பாரே போனாலும் என்?

## 47. வஞ்சர் பழி

வஞ்சர் வழிபறித்தும் வன்னெஞ்சர் தூற்றியும்
கொஞ்சமுமுன்மேற் குறைசொல்லேன்—எஞ்சுபொருள்
எல்லாம் இழந்தும் எனக்குன் புகழ்பாடும்
செல்வமே போதும் சிவம்.

## 48. உன்னிச்சை

உன்னைப் பொருளா யுணரவே யக்கள்வர்
என்னைப் பொருள்கவர்ந் தேகினரோ—மின்னைப்போல்
ஊனுயிரைக் கொண்டாலும் உன்னிச்சை என்பதலால்
ஏனென்றும் கேளேன் இனி.

## 49. கேட்டதில்லை

எவரிடமும் கேட்பதிலை என்னும் செருக்கைக்
கவரவே வந்தாரோ கள்வர்—சிவனே நான்
பிச்சை யெடுத்துப் பிழைப்பதெனில் உன்கண்ட
நச்சையெனக் கீவாய் நயந்து.

## 50. துணை செய்வாய்

பல்லெலாம் ஆடிப் பொக்கைப்
பையென வாயுமாகிச்
சொல்லெல்லாம் உளறி நெஞ்சிற்
சோகமே குடிகொண்டின்னும்

அல்லலாம் பிணி சுமந்தே
அந்தகன் வாய்ப்படாது
தொல்லையாம் பிறவி நீங்கத்
துணைசெய்வாய் சிவனே போற்றி!

### 51. இயற்கை வாழ்வு

பஞ்சபூத நிறை காத்தல்
பசிக்கும் போது பழங்கடலை;
நெஞ்சு நிரம்ப மூச்சிழுத்தல்
நீரில் ஆடிச் சபம் செய்தல்;
கொஞ்சுங் காற்று வெயிலினிலே
வேர்வை கொட்ட வேலைசெயல்
வஞ்சமற்ற மனதுடனே
வாழும் இயற்கை வாழ்விதுவே

### 52. கடமை

உடலைச் சுத்தம் செய்திடுவீர் உபவாசாதி நியமத்தால்
குடலைச் சுத்தம் செய்திடுவீர் கோபதாப மில்லாதே
மடமை வறுமை யடிமையற்ற மாசிலாத சிந்தையுடன்
கடமை முடித்துக் கடவுளருட் கருணை பற்றி வாழ்வீரே !

### 53. கொலை மறுப்பு

கதறக் கதறக் கழுத்தறுக்கும்
காதகர்கள் உன்பெயரால்
பதறப் பதறப் பலியிட்டுப்
பாபச் சோற்றை யுண்கின்றார்
உதறியுள்ளந் துடிதுடித்தேன்
உயிரைக் கொடுத்தும் இப்பழியைச்
சிதறடித்து சைவநெறி
திகழச் செய்வாய் குருபரனே !

### 54. என்னினும்

என்னினும் என்னை இதமாகப் பேணுகிறாய்
உன்னினும் இல்லை உயிர்த் துணையே—என்னின்
விருப்பேன் வெறுப்பேன் வினையேன் அருளடியில்
இருப்பேன் இருந்தபடி யே.

55. நானூர்

நானூர் என்றே ஆராயின்
நானுனென்னு நீ நானே
வானூர் கருணை மழையாலே
மண்ணை வளர்க்கும் தண்ணருளே!
ஊனூர் உடலில் உயிரும் நீ
உயிரே, வாழும் உயிர்ப்பும் நீ
நானுவுலகில் ஒருவனுய்
நடமா டுள்ளப் பெருமானே !

56. அகண்ட மோனம்

உச்சியிலே பேரின்ப வூற்றைக் கண்டேன்
உளஞ்சிலிர்க்க வுயிரமுதம் ஊறக் கண்டேன்
மிச்சவினை முடிந்ததினி வீறுகொண்ட
வேதாந்த மௌனத்தில் ஊன்றிக்கொண்டேன்
அச்சமில்லை ஐயமில்லை அழிவுமில்லை
அகமுகத்துக் குகையினிலே அமைதி கண்டேன்
நச்சுமன மாயவினை நலியக் கண்டேன்
நானுனென் றேநடன மாடுவேனே !

57. ஆன்மப் பொலிவு

பேரின்ப நிட்டையிலே பேசாத மோனத்தே
யாரென்று கண்டதுவே யானேனே—பேர்வடிவப்
பேதமிலாத் தற்போத வாதமிலாப் பேரின்பப்
போதமதே யான்மப் பொலிவு.

58. அரவிந்தர் உடல்முன்

ஆராருங் காணு அரவிந்தா நின்னுடலைப்
பாராருங் காணப் பறந்தாயோ—சீராரும்
யோகத்தாற் போக முவந்தாய் பரஞான
ஏகத்தால் என்னுள் இரு !

எண்ணி எழுதி யியற்றுமுன் பொற்கனவால்
மண்ணுடலம் பொன்னுக மாறுமுன்னே—விண்ணரசு
விண்ணிலே யென்று விரைந்தாய், அரவிந்தா
புண்ணியனே நெஞ்சிற் புகு !

நித்தியமே தேகமென நீளப் பறையடித்த
சித்தர்களும் ஊனுதறிச் சென்றனரே!—இத்தலத்தில்
எந்தை இறையருளே எண்ணி எனதுயிரே
வந்தவினை செய்து மகிழ்!

### 59. விடுதலை விடுதலை!

காற்றைப் போல விடுதலை கட்டில்லாத விடுதலை
ஆற்றை யுண்டு நடனமாடும் ஆழிபோல விடுதலை
நேற்றைக் கவலை ஏனினி நெற்றிக் கண்ணன் அருளுவான்
கூற்றையுதைத்த பாதத்தைக் கும்பிட்டோர்க்கு விடுதலை.

### 60. நினைவுயர

நீருயர நெல்லுயரும் நீடு நினைவுயரப்
பாருயரும் மானிடப் பண்புயரும்—ஓருயிரும்
கோடிப் பெயர்வடிவுங் கொண்டுலவும் கோமானே!
நாடியிலே நல்லுணர்வை நாட்டு.

### 61. திரைகடந்த சோதி

திரைகடந்த சத்தியமே தேடியோர் உள்ளே
உரைகடந்த ஓமொளியாம் ஒன்றே—கரைகடந்த
சுத்தசம யோகச் சுடரே யருட்கதிரே
வித்தகஞானத்தை விளக்கு.

### 62. போற்றி!

பண்பனே பரமா, தில்லைப்
பதியொளிர் மணியே, ஆன்ம
நண்பனே நானென்றுள்ளே
நடமிடும் அரசே, போற்றி!
கண்செவி கரணங் காணுக்
கருணையங் கடலே போற்றி
அன்பெனும் சிவமே போற்றி
அருட்பெருஞ் சுடரே போற்றி!

## 63. அப்பனே

அப்பனே மகனென் றென்னை
ஆதரித் தாண்டு கொள்ளாய்
செப்பிய படிநடந்தே
செகத்திலுன் பெருமை சொல்வேன்
ஒப்பிலா வுள்ளத்தானே
ஒருவனே உன்னையன்றி
எப்படி எங்கே செல்வேன்
என்கண்ணே கண்ணே போற்றி!

## 64. சிந்தையும் உனக்கே

சிந்தையு நீயே செய்தவ நீயே
தியானமு மோனமு நீயே
வந்தனை நீயே வரங்களு நீயே
வரகவி யமுதமு நீயே
தந்தது நீயே தந்ததை வாரித்
தந்தது முலகிற்கு நீயே
எந்தைநீ தந்த கடன் முடிந்ததுவே
உன்கடன் என்னையாண்டருளே!

## முறையீடு

ஒன்றே பலவாகி யுள்ளத் துயிர்த்துடிப்பாய்
நின்றே விளையாடு நேயமே—வென்றிக்கு
வித்தே வழிகாட்டும் வேதப் பொருளேயென்
சித்தத்திற் பெய்கவிதைத் தேன்.

அன்னையெனக் காவாய் அறிவிப் பவனுவாய்
உன்னையே நம்பி யுயிர்க்கிறேன்—என்னை நீ
கைவிட்டால் வேறு கதியுண்டோ வானின்றி
வையத்திற் குண்டோ வகை?

பூசித்தே னுன்னைப் புனித மலர்சூட்டி
நேசித்தே னுள்ளே நினைந்துருகி—யாசித்தேன்
எப்போது மன்புசெயும் இன்பத் திருவரமே
தப்பாது தந்தருளெந் தாய்!

பாடுந் திறனன்றிப் பாரிற் புகழ்விரும்பி
ஓடுந் திறனில்லேன் ஒண்டியேன்—வீடென்று
நின்னடியில் வாழ நினைத்தேன்; கருணையினால்
என்னையெடுத் தாளா யினிது.

எந்நாளும் உன்னை யிணைபிரியா தோதினேன்
அந்நாளுன் ஞானானேன் அன்படியேன்—இந்நாளில்
என்னைமறந் தாலுநீ, என்றும் உனைமறவேன்;
அன்னையமு தானந்த மே.

கண்ணீர் வடித்துக் கதறினேன் கண்பாராய்
தண்ணார் அமுதே தயாபரியே—புண்ணாகி
நொந்தேன் உலகினிலே நூறிடரைத் தாண்டி
வந்தேன் மகனெனவே வாழ்த்து.

அறியாத காட்டில் அனைவருங் கைவிட்டார்;
வறியேன் முதிய வயதில்—உறவுதுணை
நீயன்றி வேறில்லை நீரின்றி ஊரில்லை
தாயமுதே நேயவரந் தா.

இம்மா நிலத்தே யியல்பான யோகநெறி
அம்மா தழைத்துன் னருளோங்க—நிம்மதியாய்
வைத்தென்னை வாழ்வாங்கு வாழ வழிசெய்வாய்
சத்திமிகு மன்பர்களைத் தந்து.

ஓங்கித் தழைக்க வுயர்ந்த சமயோகந்
தாங்கித் தயவருளந் தாரகமே—நீங்காத
யாட்டும் பணியும் பரமாத்ம சித்தர்களின்
கூட்டுங் குலவக் குறித்து.

வேறு துணையில்லோம் வேண்டும் அடியார்க்கிங்
காறுதலை நல்கும் அணிமயிலே—மாறுபடும்
வெம்பகையை நூறுகின்ற வெற்றிவேல் வீரனையே
எம்புரியில் வைப்பா யினிது.

தாடி நரைத்துத் தளர்ந்த முதுமையிலே
ஓடி யுழைக்கும் உடம்பில்லேன்—பாடிநிதம்
உன்பரமென் றுள்ளேன்; உலகமே நீயாட்டும்
பம்பரமென் றுள்ளேன் பணிந்து.

வஞ்சர் தருந்துயரு மற்றோரை வாழவொட்டா
நஞ்சர் துயரு நலியவே—கஞ்சமலர்க்
கண்பார்த்து நீயெம்மைக் காவாய்; எமதுமனப்
புண்பார்த்து நன்மை புரிந்து.

நேற்றிருந் தின்றில்லை யென்னும் நிலவுலகில்
வேற்றுமைப் போர்கள் விளைவானேன்?—ஆற்றல்
எந்த விதத்தும்வீ ணாகாமல் இங்குநான்
வந்த வினை தீரவரந் தா.

உலகால யத்தினிலே யுன்னன்பு நேயர்
நிலவான்ம யோக நிலையம்—பலகாண
வேண்டினேன்! வெற்றி விளைப்பாய், வியன்சுடரே
ஈண்டடியார் சேர வினிது.

என்னுவி யெல்லாம் எனதுடைமை யென்பதெல்லாம்
உன்னு லுனக்கே யுவந்தளித்தேன்—அன்னையே
எப்படியுன் னிச்சை யெளியேனை ஏவிடுமோ
அப்படியே செல்வேன் அறிந்து.

தள்ளா வயதினிலே தனியே நடக்கின்றேன்
எள்ளாது நீயும் இருதுணையே—உள்ளார
நேசித்துப் பூசித்து நித்தநித்த மன்புவரம்
ஆசித்தே னீவா யருள்.

நூய பெரியாரைச் சுட்டுமதி கெட்டலையும்
பேய ருலகைப் பிரிந்தென்று ந்—தாயனைய
உள்ளன்பு கொண்ட வுயிருலகைக் கண்டின்பங்
கொள்ளன்புச் செல்வங் கொடு.

வடுமொழி பேசாமல் வன்கோபத் தீயர்
கடுமொழியென் காதில் விழாமல்—கெடுமதியர்
பக்கம் வராமற் படுபாவி யாங்கவலைத்
துக்கம் வராதவழி சொல்.

வேகமாய் வந்து விசனந்தீர்த் துன்னருளால்
தாகந் தணியத் தயைபுரிவாய்—மாகவியை
அப்பரைச் சுந்தரரை யாண்ட குருமணியே
ஒப்புனக் குண்டோ வுரை?

ஆத்திரக் கோபம் அணுகாமல், வீம்புரைசெய்
நாத்திகர் என்னை நகையாமல்—தீத்தணலும்
குண்டலி சக்தி குறையாமல் எப்போதும்
அண்டையிருந் தன்னை வளர்.

உன்னுள்ளே யானிருப்ப துண்மையெனில் என்றுமே
என்னுள்ளே நீயிருப்ப திச்சையெனின்—மன்னுள்ளே
புல்லர் துயரம் புகாது தடுத்தாண்டென்
அல்லலொழித் தன்பா லணை.

தீராத நோயெல்லாந் தீர்க்குந் திருவருளே
வாராத தீயர்பழி வந்தாலும்—ஓராதுன்
மெய்யருளே தாரகமாய் வேட்டேன்; ஒளிகாட்டிப்
பொய்யிருளைப் போகப் புரி.

தங்க நிழலளித்த தண்ணருளே, மெஞ்ஞானச்
சிங்கமே யோகச் சிகரமே—இங்கிருந்தே
காலத்திற் கேற்ற கடமை நிறைவேற்றி
ஞாலத்தி லேவெற்றி நாட்டு.

மூலக் கனலே, முதிய வுலகாளுங்
காலக் கனலே கதிரொளியே—நீலகண்டன்
பாகத் தமர்ந்த பரம சிவக்கனலே
யோகத் தமர்வாயென் னுள்.

மண்ணுக்கு வான்போல் வளத்திற்கு மாரிபோல்
கண்ணுக் கொளிபோலக் காப்பாற்றும்—வண்மையே
அண்டம் படைத்தாளும் ஆற்றலே நீயெங்கும்
உண்டுநா னுண்டுநீ யுள்.

யோக சமாஜம் உருவாகி நல்லுலகம்
ஏக சமாஜம் எனவோங்கத்—தாகமிகும்
அன்பர் குழுவை யருளாய் சிவகுருவே
உன்பணியே யென்பணியென் றோர்ந்து.

ஞான சபைகண்ட நாதாந்த வேதாந்த
மோன சமாஜ முதல்வனே—தீனன் செய்
யோகத் திருவுருவே உள்ளார்வ வெள்ளமே
தாகத்திற் கன்பமுதந் தா.

சாதி சமயச் சழக்குகளைக் கண்டுலகப்
பேதவினை கண்டுமிகப் பேதுற்றேன்—வீதியிலே
வேற்றுமையின் வஞ்ச விளையாட்டைக் கண்டுமனம்
ஆற்றுகிலேன் ஆறுதலைத் தா.

தாந்தாங் கடவுளெனத் தம்பட்டம் போடுகின்ற
மாந்தர் பிணத்தை வணங்கிலேன்—ஓர்ந்துநீ
உள்ளே யளிக்க வுலகுக் களிக்கின்றேன்
வள்ளாலென் வாழ்வுன் வரம்.

உன்னை மறந்திவ் வுலகோர் நரவடிவந்
தன்னை மதமாக்கிச் சாதியாற்—பின்னமுறத்
தேய்ந்தாரத் தீமையினைத் தீர்க்கத் திருவருளால்
ஆய்ந்தான்ம நேயமரு ளாய்.

குருமா ரெல் லாமுனையே கும்பிட் டுலகம்
ஒருமையுடன் வாழ வுதவினுல்—அருளோங்கி,
சாதிமத பேதமறச் சாந்தச் சமயோகச்
சோதியுகந் தோன்றும் சுகம்.

எனதுன தென்றே யிறுமாக்கும் மாய
மனதினை வென்றமைதி மன்ன—உனதருளே
தாரகமாய் வாழுஞ் சகசான்ம நிட்டையருள்
ஆரமுதே யானந்த மே.

உனக்கன்றே வெட்கம் உலகிவ்வா றுனுல்
கனக்கப் படைத்ததனைக் காக்க—மனக்கருணை
யில்லையெனுஞ் சொல்லை யெளியேனுங் கேட்கவோ
நல்லவழி காட்டாய் நயந்து.

நீயேதாய் தந்தை நிலவுயிர் உன்னன்புச்
சேயே யெனுமுண்மை சீர்பெறவே—நோய்செய்யும்
பொல்லாங்கைப் போக்கிப் புனிதப் புகழோங்கின்
எல்லார்க்கும் பங்குண் டினிது.

எந்தெந்த நன்மை யெனைத்தேடி வந்தாலும்
அந்தந்த நன்மை யளிப்பதுநீ—முந்தென்னை
ஆண்டு நடத்தி யறிவீந்த கற்பகமே
ஈண்டு நடத்தா யினிது.

சூதறியேன் வாதறியேன் சூறையிட்டுத் தூற்றுவோர்
தீதறிந்தும் தீதுரையாச் சேயேனை—ஆதரித்துத்
தெய்வத்தை நம்புந் திறனை விளக்கிடுவாய்
உய்வழியைக் காண வுலகு.

சத்துருக்க ளேயன்றிச் சத்துருக்க ளைக்காணேன்
சித்துருவ மான சிவகுருவே—ஒத்துலகம்
உன்னருளில் வாழும் ஒருமை தரவேண்டி
என்னிதயக் கோயில் இரு.

என்செய்வ தென்றறியேன் ஏகாந்த மோனத்திற்
பொன்செய் கவிகள் பொழிந்துநிதம்—உன்செயலே
ஆகட்டும் என்றுள் ளடங்கினேன்; இப்படியே
போகட்டு மோநான் புகல்?

பாடிப் பதரானேன் பாரிவனை என்றோது
கோடிக் குறைபேசித் திரியாது—மோடிசெயும்
புற்புத மான புவியுன் பெருமையுணர்
அற்புதங்க ளையென்னுள் ஆற்று.

வழிவழியாய் வந்திங்கே வாழ்ந்தநற் றொண்டர்
வழிவழியே வந்தேனை 'வாராய்—செழிமகனே
காக்கின்றேன்' என்றபயக் கைகாட்டி யன்புடனே
ஊக்கி நடத்தாய் உவந்து.

ஏட்டைப் படிக்கும் இறுமாப்பாற் பேசவில்லை
நாட்டைக் கலக்க நடிக்கவில்லை—பாட்டுடனே
உன்பணிக்கே யென்றன் உடல்பொரு ளாவியெலாம்
அன்பளிப்பாய்க் கொண்டென்னை யாள்.

நகையழிந்தால் வேறு நகைபண்ணிப் போட
வகையுண்டு வீர மிழந்து—தகையழிந்தால்
என்னுண்டு? வாழ்விற் கிழுக்கு வராதுன்னுட்
பின்னுண்ட பித்தனெனைப் பேண்.

மொட்டைக்கு முல்லை முடிப்பதோ மோதிரத்தைக்
கட்டைவிர லுக் கணிந்து காண்பதோ—நெட்டையின்
சட்டைகுட் டைக்குச் சரியோ சதுரத்தில்
வட்டம் புகுமோ வளைந்து?

உண்ணுழி யோகம் உறக்கமும் யோகமே
எண்ணுழி யோகம் இயல்பானேன்—கண்ணுழி
எங்குமுனைக் கண்டேன் இதய வெளியினிலே
பொங்குமுனை யன்பிற் புணர்ந்து.

நான்போனால் முக்தியெனு நன்மா ணவன்பட்ட
ஊன்புண்ணை யெண்ணி யுலகிற்கு—ஞானத்தைப்
போதிக்கவும் அஞ்சிப் புகுந்தேன் மனக்குகையில்
மேதினிக்கு நீயே விளம்பு.

வாழி மதுரகவி வாழிவிவே கானந்தர்
வாழி தயானந்த மாமுனியே—ஊழூழி
தெய்வக் குருமாரின் சீர்பரவுந் தீரர்களை
ஐயநீ இங்கே யனுப்பு.

ஊனொடுங்கி யுள்ளொடுங்கி ஓங்கார வட்டத்தே
நாணொடுங்கி ஞான மணிவிளக்கின்—மோனமே
ஏகமா யெங்கும் இலகு மகதுரிய
யோகமே வாழ்வாயென் னுள்.

சும்மா விருந்தாலிச் சுற்றுலகென் னாகுமென்றே
விம்மாதே யுள்ளே விழித்தடங்கு—நம்மாலே
என்னாகும்? செம்பும் இறைவ னருளிருந்தாற்
பொன்னாகு மன்றோ பொலிந்து!

அஞ்செழுத்தை யோதி யரனைச் சரண்புகுந்து
நெஞ்சழுத்தங்கொண்டு நினைமனமே—மிஞ்சிவரும்
தீப்பகையைச் சுட்டெரிக்குந் தீபத் திருவருளே.
பூப்போலப் புன்னகைத்துப் போ.

தில்லிக் கொடிக்கிந்தத் தேசமெல்லாஞ் செல்வாக்காம்
இல்லக் கொடிக்கவ்வா றில்லையே—அல்லலறும்
ஆன்மவொரு மைக்கே யகிலப் புகழுண்டாம்,
பான்மையறிந் துள்ளே பழ்கு.

வேந்துதலைக் காகிதமும் வெள்ளிவிலை யாவதுபோல்
ஏந்தருளால் ஏற்றமுறும் ஏழையுமே—சாந்தமுடன்
முத்திதரும் சுத்தசக்தி முத்திரையைப் பூண்மனமே
சித்திதரும் பத்திச் சிறப்பு.

20943

மிக்கரச முத்திரையை மேலே பொறித்தாலே
நிக்கலும் வெள்ளிக்கு நேராகும்—பக்குவமாம்
ஆசான் அருளால் அறிவின் மதிப்போங்கும்
பாசான்மா சேரும் பதி.

பண்டத்தி லேகாணும் பாட்டாளி யின்புலமை
பிண்டத்திற்காணும் பிரமாண்டம்—கண்டுணரும்
சீவனிற் காணும் சிவமே—மலையருவி
தாவிவர மின்சக்தி தான்.

ஆணைப்பெண் ணாக்கி யலிக்கு மகவளிக்கும்
வீணான சித்தி விரும்பாதே—காணமல்
உள்ளத்தே யுள்ளதனில் உள்ளபடி யுள்ளிருக்கும்
விள்ளரிய சித்தை விரும்பு.

அறிவை யறிவால் அறிவதுவே தூய
நிறைவாம் அதுநீ நினைவாயே—பொறிவாயிற்
செல்லாதே பேர்புகழைத் தேடாதே; வாய்திறந்து
சொல்லாதே சோதி துலக்கு.

சிவனருளே தாரகமாய்ச் செய்வனசெய் நெஞ்சே
அவனருளால் வெற்றி யரும்பும்—சவமான
தேகத்தி லாடுகின்ற சீவன் சிவமயமாம்
யோகத்தைச் செய்வா யுகந்து.

குறைபோகா துள்ளே குகையுட் புகுந்தும்
கறைபோகா தானைக் கழுவின்—பறையாலே
கள்ளன் மிரளான்; கனவிற் புகுந்திடுவான்
உள்ளம் விழித்தொளியில் ஊன்று.

நம்பாதே பொய்யுலகை நானென்று பேசாதே
வம்பாடும் வாயை வளர்க்காதே—அன்பில்லாப்
பாலபிஷே கத்தண்ணீர் பார்த்துலக வஞ்சனையை
வேலவனும் கல்லானன் விண்டு.

ஆலாய்த் தழைத்தே யருகுபோல் வேரோடிப்
பாலாகப் பொங்கும் பதிப்பாட்டு—நாலைந்தும்
ஆன்மாவிற் கூடி யமர நிலை பெற்றிருக்குந்
தான்மா தவமிருக்கத் தான்.

கண்ணாடி வீட்டிற் கடிநாய் புகுந்ததெனத்
தண்ணீர் உருக்கண்டு தாவுங் குரங்கைப்போல்
உண்ணீரில் ஒந்தியென வேயுவட்டும் பேதைபோல்
மண்ணியல் மாந்தர் மனவிகா ரக்கூத்தே.

வெள்ளமிலை யென்னும் வெறுங்குமிழி யொக்குமே
உள்ளபொரு ளைவெறுப்பார் ஊர்வம்பே—உள்ளே
அருவாம் சிவனருளும் அன்னைமுலைப் பால்போல்
உருவாகும் அன்பர் உளம்.

வெள்ளக் கடலும் விரிநிலமும் வான்மழையும்
விள்ளற் கரிய வியன்சுடரும்—உள்ளத்தே
ஆடும் அருளும் அறிவியலால் ஆகுமோ
கூட்டுமரு ளுக்குக்கை கூப்பு.

காலைக் கமலம்போற் கட்டவிழு மல்லிகைபோல்
பாலைச் சுரக்கும் பசுவெனவே—மேலருவி
யாழைப்போற் பூங்குழலின் ஏழிசையைப் போலுலகில்
வாழப் பழகுவதே வாழ்வு.

ஆண்டவனே தந்தை; அவன்சேய் உயிருலகே
ஈண்டுல காலயத்தில் எல்லாரும்—பூண்டமனச்
சாட்சிவழி பற்றிச் சமயோக வாழ்வடையும்
காட்சியே கண்குளிரக் காண்.

போகமய மான புவியினிலே சுத்தசக்தி
யோகநிலங் காண வுழைத்திடுவோம்—வேகவருள்
ஊற்றுப் பெருகி யுளங்குளிரப் பச்சைவளம்
தோற்றநீ செய்வாய் துணை.

வற்றாப்பா லூற்றை வழங்கிப் பசுநிழலிற்
கற்றா சுரக்கக் கனிந்தருளாய்—நற்றாயே
நீதந்த யோக நிலத்தில் அமுதொழுகும்
பாதந்த தீஞ்சுவையைப் பாய்ச்சு.

உண்ண வுடுக்க வுவந்துன்னைப் பூசிக்கக்
கண்ணழகு கொஞ்சக் கவிமகிழ—விண்ணழகு
மேவி விளையாட வெற்றித் திருவிளங்கத்
தேவியே நல்காய் செழிப்பு.

அருளாலே எங்கும் அதுவேதா னாகும்
பொருளாக நீயே பொலிவாய்—இருளெல்லாம்
வென்று விழுங்கும் விளக்கேயுன் சோதியினில்
ஒன்றி யிருப்பேன் உவந்து.

கண்ணின் கனலாற் கருத்துருக்கி, யென்மனதை
உண்ணும் ஒருவன் உளத்துள்ளான்—கண்ணன்
அவனே முருகன், அவனேயா னந்தன் ;
அவனே யகண்டபர னும் !

சீவ சகபரத்திற் சிக்காவுள் ளின்பத்தை
மேவி யதுநா னெனவிருந்து—பூவினிலே
எப்போது மான்மா நா னென்றுணர வல்லார்க்கு
முப்போதும் இல்லை முரண்.

முரணாக வந்து முளைத்த மனத்தைச்
சரணாகச் செய்யுந் தவமே—அரணும்,
திருவருளே தாரகமாய்ச் சீவிப்பாய் நெஞ்சே,
கருவினையெல் லாங்கரையக் கண்டு.

உள்ளேபோ நெஞ்சே யுனக்குவெளி வேலையிலை ;
கள்ளப் புலனைக் கலக்காதே—மெள்ளமெள்ள
வந்துன்னைக் கொள்ளைகொளும் வஞ்சக் கலதியராம்
ஐந்துபேர் தம்மை அடக்கு.

சித்தத் திரையைத் திடமாகத் தாண்டியே
எத்தகைய எண்ணமும் இன்றியே—சுத்தசக்தி
வைத்தபடி நிற்பாய் வளராத்மா னந்தத்தைத்
துய்த்தபடி நெஞ்சே துணிந்து.

வாழ்க குருபரமன், வாழ்க பரமோனம்,
வாழ்கநா னென்னும் மந்திரமே—வாழ்கவே
அன்புண்மை யாக வமர்ந்த சுயஞ்சோதி
இன்பமே யஃதாம் இயல்பு.

எல்லாரும் ஓர்குலமே என்று முரசடித்துப்
பொல்லாதவேற்றுமையைபோக்குவோம்தொல்லுலகம்
ஒன்றே, தொடுவானம் ஒன்றே, உயிரான்மா
ஒன்றே, கடவுள் உணர்.

# சுத்தசக்தி வேகம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓமென்போம்
ஒத்திசைக்கும் அன்பருள்ளம் யோகஜோதி யாகுமே
எத்திசையும் எப்பொருளும் எவ்வுலகு மானதே
சுத்தசக்தி ஓமெனத் துதிக்க வீறு துள்ளுமே !

பொன்னிளம் அருணனின் புதுநகை வனப்பிலே
புன்னகை மணங்கமழும் பூமுகப் பொலிவிலே
மின்னலிட் டபயமார்க்கு மேகவான் கருணையில்
அன்னை சுத்தசக்தியின் அருளைக் கண்டு ருகுவோம்

கள்ளமோங்கும் பூவிலே கலங்கிவாடி டாமலே
தெள்ளறி வுடன்விழித் திருந்திருளை வெல்லுவோம்
உள்ளமோங்க உண்மையோங்க உலக மோங்கப் பேரின்ப
வெள்ள மோங்க சுத்தசக்தி வேகமோங்க நாளுமே !

பஞ்சபூதப் பஞ்சரத்தில் பச்சிளங் கிளியென
வஞ்சமற்று நின்னையே வழுத்தியன்பு செய்கிறேன்
நெஞ்சகந் துடிப்பதும் உயிர்ப்பதும் நினைப்பதும்
தஞ்சமீந்த நின்செயல் சகாயசுத்த சக்தியே !

அயில் வடிவ மாகிடும் அருமறை யடுக்கிலே
குயிலெனக் குரலெடுத்துக் கூவுகின்ற நாதமே
மயிலென நடஞ்செயும் மஹாதுரீய ஜோதியே
எயிலெரித்த ஞானமே யிதயசுத்த சக்தியே.

எப்பெயர் வடிவுநீ எவர்சமய வுள்ளுநீ
அப்பெயர் வடிவுடன் அவர்சமயந் தாண்டியே
ஒப்பில்லாத ஆன்மநேய மோங்கு சுத்தசக்தியே
முப்பொருளு மாயினை முதற்பெரும் பழமையே !

விரும்புமுன் விருப்பிலாது விண்ணுமண்ணு மெங்குமே
துரும்புமிங் கசையுமோ சுரும்பதும் பறக்குமோ
அரும்பவிழ்ந் தழகுடன் அமுதத்தே னுகுக்குமோ
கரும்பிலே கனியிலே யினிக்குமன்புக் கற்கண்டே !

உலகமான கோவிலில் உயர்களாய் உலாவுவாய்
கலகலென்னத் தாவியே கடல் நடம் புரிகுவாய்
விலகிடாத நேயமே, விலகிடாதுன்னன்பிலே
இலகி யின்ப மோங்கவே, இலகுவாயென்னுள்ளமே!

சத்தமின்றி நின்னருளைச் சார்ந்து சாதனஞ்செயும்
பித்தனிந்தப் பிள்ளையைப் பிரித்துவைப்ப தாகுமோ
சித்தசுத்தி யீந்துயோக சித்தியீந் தருளுவாய்!
அத்தனம்மை யன்புருவ மானசுத்த சக்தியே!

அன்னையப்ப னென்றதும் அமுதமூறும் வாயிலே
உன்னவுன்ன நெஞ்சிலின்ப மூறிப்பொங்கி யோடுமே
பின்னமா முயிரினங்கள் பேதமின்றிக் கூடுமே
வன்னமா முலகக்கோயில் வாழ்விலன்பு சூழுமே!

பெயர்வடிவப் பேதமின்றிப் பேய்மனப் பிரிவின்றி
மயர்வுறுந் தனிமடமைச் சாகசங்க ளின்றியே
உயிரெனத் துடிக்குமுன்னை உள்ளுறக் கலந்திடும்
உயர்தியான யோகத்தின் உணர்வில் வாழ்க பூமியே.

வித்தகன்கை வீணைபோல வீரன்கைத் துப்பாக்கிபோல்
சித்தனுள் ளமைதிபோலச் சேயுளன்னை யன்புபோல்
முத்தமிழ்ப் புலவனுள் முகிழ்ந்தெழுங் கவிதைபோல்
சுத்த சக்தி நின்னுளே துலங்கி வாழ வேண்டினேன்

தூயசிந்தை தூயசெய்கை தூயசெஞ்சொல் போற்றியே
தூய யோக சித்தியாற் சுடருந்தூய சக்தியால்
தூயவுள் ளுறவுபேணித் தொண்டுசெய்யும் அன்பரை
நேயராகக் காட்டுவாய் நிகரிலாத தெய்வமே!

சாதிமா மதந்தரும் சழக்கிலா துலகிலே
பேதவாதச் சூதுசெய் பிரிவினைக ளின்றியே
ஆதவன் கதிர்கள்போல் அனைவரும் இணைந்தொளிர்
சாதனத்தை நல்குவாய் சதாசிவக் கருணையே.

இங்குநீ புரிந்திடும் இதயமின் னடனமே
எங்குமே யகண்டமாய் இலங்குமாட லானதே
அங்கு மிங்கு மென்னலின்றி யன்புளத் துடிப்பிலே
பொங்குமின்ப முண்டுவாழும் புண்ணியஞ்செய் யன்னையே!

ஈனமான பேதமின்றி என்னதுன்ன தின்றியே
வானவட்டம் போலநின் வளைப்பிலான்ம நேயராய்
மானமாக மானிடர் மனங்கலந்து வாழ்ந்திடும்
ஞானமான தேனை நல்கு ஞால சுத்தசக்தியே.

ஆழிபோலும் ஆழநல் லறிவைத்தந் தருளுவாய்
ஊழியற்ற வானைப்போல் உளத்தமைதி நல்குவாய்
ஏழிசைக் குழலென்றுள்ளே இன்னிசை பொழிகுவாய்
வாழிசை வழிவகுத்த வாய்மையான தூய்மையே.

பார்மிசை வகுப்புவாதப் பாதகங்க ளின்றியே
ஊர்திருத்துங் கூச்சலின்றி உள்ளுறத் திருந்தியே
பேர்புகழ் பதவி வேட்டைப் பேயிலா தியல்புறும்
சீர்திருத்த வாழ்வுவாழச் செய்யெம் மன்புத் தெய்வமே.

கட்டிலா துழைத்துணுங் கவலையற்ற திண்மையும்
தட்டிலாத வீறுகொண்ட சக்திநல்கு கல்வியும்
மொட்டலர்வ தென்னவே முகிழ்த்தெழும் புலமையும்
திட்டமாக நல்குவாய் திருக்கருணை வெள்ளமே!

தாந்தம தெனுஞ்செருக்குஞ் சாதிவாதத் தீமையும்
சாய்ந்துபண்டை மாமதச் சழக்கும்பொய் வழக்கமும்
ஓய்ந்தெலாருஞ் ஜீவசாட்சி ஒன்றைப்பற்றி வாழ்ந்திடும்
சாந்தநாளைக் காட்டுவாய் சமரஸக் கடவுளே!

அல்லலான நாட்டுரிமை ஆழிவா னுரிமையாம்
தொல்லையின்றிக் குண்டுத்தீ சுடும்கொடுமையின்றியே
எல்லைக்கோடில் லாதுலக மெங்குமொன்று கூடியே
நல்லதாற்றி வாழுகின்ற நாளைத்தா கடவுளே!

ஏகுமின்னும் ஆகுமின்னும் என்னப்பெண்ணு மாணுடன்
யோகபோக மாகவாழ வுள்ளொருமை நல்குவாய்
வேகவெம் புலனடக்கி வேட்கைநெஞ் சடக்கியே
ஏகமாகு மான்மநேய மீந்தருள் கடவுளே!

மிஞ்சு சீர் வரிசையின் விநோதச் சண்டையேனினி;
நெஞ்சமொன்றி வஞ்சமின்றி நேயராக வாழ்வரே
மஞ்சட்குங்கு மத்துடனே மாதர்தங்கச் சேய்களைக்
கொஞ்சியாடு நாட்களைக் குலாவச்செய் கடவுளே!

பாதகஞ்செய் தட்சிணைப் பணவணிக மின்றியே
சாதகஞ்செய் காதல்கூடிச் சம்மதித்த காதலர்
கீதமார் குயில் மயில் கிளியெனக் களித்திடும்
சோதிநாளை யீகுவாய் சுதந்தரக் கடவுளே !

தொழிலுடன் இணைந்த கல்வி தேர்ந்ததொண்ட ராகவே
எழிலுடன் பொதுநல மெனவுழைத் துலகிலே
செழிபொருள் பகுத்துணும் சிறந்த யோக மொன்றியே
அழிவிலா துயிர்கள் வாழும் அன்பருள் கடவுளே.

நால்வருணம் ஆயிரம் நலங்கெடும் வருணமாய்
மேல்வருணக் கீழ்வருண வேறுபா டில்லாமலே
தோல்வருண மாயமின்றித் தூயவுள் ளொருமையில்
ஆலெனச் செழித்திடும் அமைப்பருள் கடவுளே.

ஓர் விரிந்த வானகம் ஒரேபரந்த மாநிலம்
ஓருயர்ந்த மானிடம் உளத்திலொன்று மன்புயிர்
ஓருயர்ந்த ஆன்மநேய ஒருமைகூடி வாழவே
சீர்சிறந்த சுத்தயோக சக்திவெற்றி சேர்கவே.

மின்னனைய பொய்யுடல் மினுக்கிலே மயங்கிலேன்
பொன் பெண்போகபோக்கியப் பொலிவிலே முயங்கிலேன்
என்னைப்போல மன்னுலகை யெண்ணியன்பு செய்வரம்
அன்னையே யுவந்தருள் அமுதசுத்த சக்தியே !

நிலம்பலம் நெடும்புகழ் நிறைந்தசெல்வ மாளிகை
தலம்புகழ் பெருமைகள் சரித்திரப் பொலிவுடன்
பலம்பெறும் படைவலி பரந்தவெற்றி யாவையும்
நலந்தரும் உனதுநாம சக்திநல்கு மின்பமே.

தீங்கரும்பின் சாறெனத் திதிக்குமுக் கனியெனப்
பூங்கமழுந் தேனெனெப் புதியபா லமுதென
ஓங்கிசைத் தமிழென உலகிசை வளமென
ஈங்கெனக் கவற்றினும் இனிப்பதுன் இசையதே.

சீருயர்ந்த ஞானமும் செழித்துயர்ந்த செல்வமும்
பேருயர்ந்த கீர்த்தியும் பிணியிலா வுடலமும்
ஏருயர்ந்த வண்மையும் எளியவந்திங் கெய்துமே
நேருயர்ந்த நின்னருள் நிலவுகின்ற நேரமே !

தானெனும் அகந்தையும் தனிச்செருக்கின் வீக்கமும்
ஏனெனின் எரிசினக் கொதிப்பும், ஏறுங் காமத்தால்
ஆனவூன் புணர்ப்புடன் அழியுமாசை நோய்களும்
மானிடக் குறைகளும் வராதருள் கடவுளே.

துக்கமான காட்சியிற் சுழலுகின்ற நெஞ்சமும்
சிக்கலான வஞ்சரின் சிறுமனப் பொறாமையும்
பக்குவமி லாதவர் பகையும் பக்கம் வந்திடாத்
தக்கசூழ லீந்துமெய்த் தவம்பலிக்கச் செய்குவாய்!

நஞ்சினும் கொடியவர் நமனினும் வலியவர்
வஞ்சமற்ற தொண்டரை வசைதுய ரிடும்பையால்
வெஞ்சினப் பொறாமையால் வெடியகந்தைப் பேயினால்
அஞ்சிடத் துயர் செயும் அரக்கரைப் பொறுப்பையோ ?

எக்குலமும் எப்பிறப்பும் எவ்வினமும் உன்னினம்
மிக்குயிர்க் குலங்களுன்றன் மேனியென் றறிகுவோம்
ஒக்கநீ யிருக்கையில் உளந்தொறும், உலகெலாம்
தொக்கவாழ்வுச் சோலையிற் சுரண்டுகுண்டுப் போர்களேன்?

அற்றமுற்ற மாந்தர்கள் அவலச்சண்டை செய்வதேன்?
குற்றமற்ற சீலரைக் கொடியவர் குமைத்தலேன்?
கற்றமெய்க் கவிகளும் கதியிலா தலைவதேன்?
நற்றவக் கனலினாலிஞ் ஞாலமான கோலமே!

குட்சியற்ற கொள்கையும் கொடுமையற்ற நீதியும்
கட்சியற்ற தேர்தலும் கடுமையற்ற சட்டமும்
உட்சின மிலாததூய உள்ளுறவு மெய்திடின்
மட்சிறிய கூட்டிலே மகிழமைதி தோன்றுமே!

கோபத்தீ கொதித்திடும் கொடும்புயற் பகைவரின்
சாபத்தீயில் என்னை வாட்டிச் சாந்தத்தைக் கெடுத்திடும்
ஆபத்தைத் தவிர்த்துன் அன்பர் கூட்டத்தை யருளியென்
தாபத்தைத் தணித்தருள் தயவெனும் அமுதமே!

நச்சுறும் பகைக்குலம் நடுநடுங்கி யோடவே
துச்சமா யொடுங்கிடத் துயர்க்குலப் பிசாசுகள்
பச்சையூன் புசித்திடும் பகாசுரர் பொடிபட
அச்சமின்றிப் போர்செயும் அமரசக்தி நல்குவாய்!

சீறுபோர் முனையினிலும் செஞ்சிலுவைச் சங்கம்போல்
ஆறுதல் அளித்திடும் அருட்பணி யளித்தருள்
ஏறுவான் அணுத்திறன் எனக்கனல் இறைவியே,
வீறுகொண்டு தீமைதீய நன்மைவெல்ல நீயருள்!

படிப்பிலும் பகட்டிலும் படபடத்த பேச்சிலும்
நடிப்பிலும் உலகமேடை நாடகப் புகழிலும்
தடிப்பிலும் சிறுமனச் சலிப்பிலும் செருக்கிலும்
பிடிப்பறப் பிடித்தனன் பிடிக்கரும் பிடிப்பையே.

ஓம்க்லீம் ஓம்காளி ஓம்பவானி சக்திஓம்
ஓம்க்ரீம் ஓம்ருத்ர சக்திரக்த சண்டி ஓம்
ஓம்ஹ்ரீம் துஷ்டசத்ரு நாச துர்க்கா சக்திஓம்
ஓம்தும் ஐம்ஔம் ஹூம்சுத்த சக்திஓம்!

துயர்தரும் பொறாமையும் துருதுருத்த சூழ்ச்சியும்
அயர்வுறுஞ் சினங்கொதிக்கும் ஆத்திரப் பகைமையும்
மயர்வுற மனத்தினை மருவியின்னல் செய்திடா
வுயர்குண மளித்தருள் உயிர்க்கினிய தெய்வமே!

அச்சத்தை மிரட்டுவாய் அரக்கரை விரட்டுவாய்
துச்சத்தை விலக்குவாய் துயர்களைத் தகர்த்திடாய்
நச்சனைய வஞ்சரை நலிக்கும்வீர துர்க்கையே
உச்சமான சீர்த்தி நல்கும் ஓம்காளி ஓம்சரண்!

நாயெனச் சினத்தினர் நரியென மனத்தினர்
பேயெனக் கொடியவர் பிணியென வருபவர்
தீயெனச் சுளிப்பவர் செயும் துயர் பொடிபடத்
தாயெனக் கருணைகாட்டித் தாங்குவாய் பவானியே!

வெம்பகைக் குலங்களின் வெடிசினப் பொறாமைகள்
சம்பமான வாய்வெடிகள் சாய்ந்து தோல்விகண்டிட
நம்பியுன்னை நாடும் அன்பர் நல்வினைகள் வென்றிட
அம்பிகைநின் ஆன்மசக்தி யூறுமாற்ற லீந்தருள்!

சீறும்போர் முனையிலே செயந்தரும் பயங்கரி
ஏறுநற் சபையிலே இனியவாக் கருளுவாய்
கூறும்வீரக் கூட்டத்திற் குறையிலாத கொற்றநல்
வீறுதந் தருளுவாய் விஜயசக்தி யேசரண்!

காளிகாளி யென்றுநான் கனல்பெறக் கதறிடும்
வேளைவந்து வேளைவெல்லும் வித்தையை யளித்தருள்
நாளெலாம் உனதிசையை நாட்டும்பாட்டு நல்கிநின்
ஆளெனப் பணித்தருள் அபயமீயு மன்னையே !

சித்தமூன்றித் தியானமூன்றிச் செய்யுஞ்செய்கை யாவுநின்
பத்தியாய் நிவேதனம் பலமதாகப் பாலிப்பாய்
சத்தமின்றி நின்சரண் புகுந்துசாத னஞ்செய்தேன்
சித்தியீவ துன்கடன் செழித்தசுத்த சக்தியே !

உலக வாழ்வில் எத்தனை இடர்களுற்ற போதிலும்
கலகவெம் பிசாசுகள் கனல்பொழிந்த போதிலும்
விலகிடத் துயர்க்குலம் விழித்திருந் தருளுவாய்
இலகிநின் பெருமை எங்கும் இன்பவாழ்வு சூழ்கவே !

வன்னமாம் உலகக்கோவில் வாழுமுன் உயிர்க்குலம்
பின்னமாய்ச் சிதைந்திடாது பேரின்பத்தில் ஒன்றியே
உன்னருளில் ஓர்குல வுணர்வுகொண்டு வாழவே
அன்னை நின்னை வேண்டினேன் அமுதசுத்த சக்தியே !

அங்கையற்கண் அன்னையாய் அருள்பொழிந்த சக்தியே !
பங்கயக் கரத்தினால் வரந்தரும் பராம்பிகே !
துங்கநல் லடியவர் துணைவரும் இணையிலாத்
தங்கமே கருணையான தாயமுத மேசரண் !

காட்டுச்சிங்க மீதுசெல்லும் காளைஏறி பங்கியே !
நாட்டுச்செல்வியே சுடலைக் காட்டுநட்ட மாடியின்
வீட்டுச்செல்வியே, கருணை வேதமோதி தேவர்பா
ராட்டுச் செல்வியே, எனக்குன் பாட்டுச் செல்வமாகவே!

யாழிசை குழலிசை முழவிசை யினியநல்
ஏழிசை வளங்களோ டிறைஞ்சிப்பாடி யாடவே
வாழிசைத் தமிழளித்த வண்மையேயென் னம்மையே
சூழிசை யமுதமே சுருதியின் வடிவமே !

இறையுல கறிவறமொ டன்பொழுக்க மில்லறம்
நிறைகுலந் தொழிலரசு நீண்டயோக சித்தியின்
முறைவழி யெல்லாருமின்ப முற்றிமுன்முன் னேறிட
மறைவகுத்த தெய்வமே மனம்வகித் தருளுவாய்...!

யோகமாய், உலகெலாம் இயற்கையோ கிலேசிவ
போகமாக வாழ்வெலாம் புலன்வழி புணர்ந்திடும்
தாகமோக சோகமின்றிச் சச்சிதானந் தத்தினைத்
தேகவாழ்விற் கண்டுமாந்தர் தெய்வவாழ்வு சேர்கவே!

அன்புசெய்யும் அன்பருள் அமுதமூறிப் பொங்கிடும்
இன்பமாய் வளர்ந்தனை இயற்கையாம் உலகிலே
துன்பரக்கர் வெய்யநஞ்சைச் சுட்டெரித்தி டாததேன்?
பொன்பரவுங் காலைமார்பிற் புன்னகைக்கும் பூவையே!

ஒப்பிலாக் கருணையே உயிரெனத் துடித்திடும்
செப்பரிய சின்மயத் திருவருட் பெருக்கமே
இப்பிறவி மாறிநின் னியல்பிலே யிருந்திடும்
அப்புதுப் பிறவியை யளித்தருளென் அன்னையே!

மணியுடன் ஒளியென மனத்துடன் நினைப்பென
அணியுடன் அழகென அழகுடன் மணமென
துணியுடனே நூலெனத் தொகுத்திலங்கு சக்தியே
பணியுடன் இசைத்துனைப் பராவிடும் வரமருள்!

சாதுவாகி யுன்னைப்பாடிச் சாந்தமாக வாழ்கிறேன்
ஏதும்வே றறிகிலேன் எதிரிகள் முளைப்பதேன்?
சூதுவாது செய்யுந்துட்டர் சூழ்ச்சிவீழ்ச்சி கண்டிடும்
ஏதுவில்லையோ? உலகில் என்றுமிந்தத் தொல்லையோ?

ஏசித்துப்பி வைதடித்த ஏசுவின் விரோதிகள்
ஆசித்துன்னை வாழ்த்துகின்ற அன்பருக்குத் துன்பராய்
நாசத்தீமை சூழவே நலிவிலாது வாழ்வரோ?
பூசித்துன்னை வேண்டுவோர் புகலிலாது தாழ்வரோ?

பூணும்பொன்னும் போலவே புவியும்வானும் போலவே
ஆணும் பெண்ணும் அன்பறிவில் ஆன்மநேய ராகவே
காணுலகில் வாழுகின்ற காலந்தன்னைக் கண்முனே
காணுமின்ப மீகுவாய் கனிந்தசுத்த சக்தியே!

இகத்திலே பரத்தினை இதயத்தே யுணர்ந்திடும்
அகத்திலே சுகத்தினை அமைதியிற் செயலினை
சகத்தில்விண் ணரசினைத் தனிப்பெருங் கருணையால்
உகத்தலென் னுயிரினுக் குகந்தகாட்சி யாவதே.

நினைத்ததே வடிவமாய் நிலைத்ததே நிலையதாய்
அனைத்துமான நின்னை நாம் அழைத்ததே பெயரதாய்
வினைத்தளை யிலாது நீ விளைக்குமாடல் ஆடலாய்
எனைத்துநின் செயலதாய் இருப்பதென் இயற்கையே!

காவியப் பொழிலிலே கனவுவிண் மலையிலே
ஓவிய வியற்கையில் உயிர்க்கலை யழகிலே
ஆவியை யுருக்குமுன் அருட்சுடரி னன்பிலே
தேவியேயென் சிந்தனை செழிக்குமின்ப மீகுவாய்!

கோடிக்கோடி விண்மலர் குளிர்நகை புரிந்திடக்
கோடிக்கோடி நுண்ணணுக் குலங்கள்கூத் தியற்றிடக்
கோடிக்கோடி யற்புதங் குலாவுமண்டக் கோவிலில்
பாடிப்பாடி யுன்னையே பராவுமின்ப மீகுவாய்!

அன்றுமின்று மென்றுமுண்மை யன்பருட் பரம்பொருள்
ஒன்றுதான் எனும் உணர்ச்சி ஓங்கிநீங்கி லாததாய்
நன்றறிந் துணர்ந்தது நடனமாடுங் காட்சியை
வென்றுளே யுவந்துவந்து வேட்டலென்றன் வேட்கையே!

உச்சமா மலையருவி யோதும்வேத நாதமே
பச்சையம் பயிரைக்கொஞ்சும் தென்றலோதும் பாசுரம்
இச்சை கொண்ட நற்கனி இசைந்துபாடும் புள்ளினம்
அச்சமற் றுலாவியல் அழகுடன் உலாவுவேன்.

சித்தொளிர் வெளியிலே சிதம்பரச் சபையிலே
முத்தொளிர் நிலாவிலே முழுப்பொருள் முழக்கிலே
சத்துசித்து ஆனந்தத் தனிநடம் புரிந்திடும்
சுத்தசக்தித் தெய்வமே சுருதியாம் அகரமே!

அத்தனாகி யம்மையாகி அன்புமாகி யின்பமாய்
ஒத்தநற் றுணையுமாய் உலகமாய் உயிர்களாய்
எத்திசையும் எப்பொழுதும் என்னுள்யானு நீயுமாய்
சுத்தசக்தி போற்றியென்னை யாண்டசோதி போற்றியே!

குமரரிற் குமரனும் குழந்தையிற் குழந்தையாம்
அமரரில் அமரனும் அறிஞரில் அறிவதாம்
விமரிசைப் புலவருள் வியன்பெரும் புலமையாம்
நமதுதூய நெஞ்சகத்து நானெனத் துடிப்பதே!

அன்பிலே முளைத்திடும் அருளிலே திளைத்திடும்
பொன்பொலி அழகிலே பொருந்திடும் இயற்கையில்
இன்பமாகக் கூடியென் னிதயத்தே னிசைகளை
உன்பழுத்த வுள்ளம் பொங்க ஊட்டுமின்ப மீகுவாய்

சக்தியும் சிவனுங்கூடும் சாந்தமான நெஞ்சிலே
நித்தியம் பதம்பிடித்து நிர்த்தமாடி நின்னையே
பக்திசெய் பனுவலீந்து பாசுரத்தி னோசையே
எத்திசையும் சுத்தசக்தி யின்பமென்னப் பாய்கவே !

அல்லலில்லை அச்சமில்லை ஐயமில்லை ; வாழ்விலே
இல்லையென்ப தில்லையே எவர்க்கு மின்ன லில்லையே
எல்லையற்ற வான்குடை நிழலிலின்ப மெய்துமே
எல்லையற்ற ஒன்றிலே இணைந்துவாழு மன்பரே !

போற்றிபோற்றி யோகமான போகமே சிநேகமே !
போற்றிஏக மேஅநேக மானபூர்ண ஜோதியே !
ஆற்றலீயும் வீரமே, அறிவு நல்கும் ஆதியே !
போற்றிசுத்த சக்திஓம் பொலிகநின் பெருமையே !



# பரமாத்ம தியானம்

ஓம் பரம்பொருளே அருள் வடிவான
உள்ளக் கணபதியே
ஓம் நடராஜா ஓம் சிவமுருகா
உலகப் பெருமானே
ஓம் பரந்தாமா ஹரிநாராயண
உயிருக் குயிர் நீயே
ஓம் சுத்தசச்சி தானந்தச் சக்திச்
சுடரே ஓம் வணக்கம்!

ஆதியு நீயே! அந்தமு நீயே!
அப்பாலும் நீயே!
சோதியு நீயே! பூதமு நீயே!
சூழியற்கை நீயே!
ஓதிடு மறையின் உட்பொருள் நீயே!
உலகினை யாளுகின்ற
நீதியு நீயே! நேர்மையு நீயே!
நெஞ்சத் தெம்மானே!

ஒருமையு நீயே பன்மையு நீயே
உயிருக் குயிர் நீயே
அருமையு நீயே பெருமையு நீயே
அற்புதச் சிற்பரனே!
உருவுட னுலவும் அருவனு நீயே
உள்ளன் பர்க்கருளும்
குருமணி நீயே கும்பிடு மிதயக்
குகைக் கனலும் நீயே!

காருங் கடலுங் கதிரும் வானும்
காற்றும் உன் சக்தி
பாரும் பயிரும் உயிரும் உடலும்
பரமா நின் சக்தி

## பரமாத்ம தியானம்

வேருங் கிளையும் பூவுங் கனியும்
விளைவும் உன் சக்தி
சீரும் புகழும் செல்வத் திருவும்
சிவமே நின் சக்தி!

பாடும் அன்பர் பாட்டின் பொருளும்
பண்ணின் பழு நீயே
ஆடுந் தொண்டர் ஆட்டத் துடனே
அடிவைப் பது நீயே
கூடும் புலவர் கூட்டத் துள்ளே
குலவும் ஒளி நீயே!
ஓடும் உயிரின் ஓட்டத்துள்ளே
ஓமென்பது நீயே!

கண்ணுங் காணுங் காட்சிப் பொருளுங்
காண்பானும் நீயே
பெண்ணிற் பெண்ணும் ஆணில் ஆணும்
பெருவாழ்வும் நீயே!
மண்ணிற் காணும் மகிமைக் குள்ளே
வளரும் மங்கலமே
எண்ணி எண்ணி இன்பங் கொண்டேன்
என்னுயிருக் கிறைவா!

பஞ்ச பூதப் பஞ்ச ரத்துட்
பயிலுங் கிளி நீயே
அஞ்சா தேயென் றபய மளிக்கும்
ஆண்டவ னும் நீயே
வஞ்ச மற்ற தொண்டர் தம்மை
வாழ்விப் பாய் நீயே
தஞ்சம் என்றே நம்பும் அன்பர்
தாரகமே சரணம்!

இல்லை இல்லை என்பா ருள்ளும்
இதயத் துடிப்பா ஞய்
எல்லை யில்லா தங்கு மிங்கும்
எங்கும் பொலிகின் ருய்

அல்லா அகரா அப்பா அம்மா
• அரி அரனே யென்று
சொல்லா லன்பர் சொல்லிப் பணியும்
சுத்தாத்மா நீயே!

காண்பது மாளுய் கேட்பது மாளுய்
கருதுவ தும் ஆளுய்
பூண்பது மாளுய் பூரண ளுய்
புருஷோத் தமளு ளுய்
ஆண்பெண் ளுய் ஆருயி ராளுய்
அகநாடகளுய்
மாண்புறு பழமை மங்கலப் புதுமை
வளர்கலை யழகா ளுய்!

அலைவே றில்லை கடல்வே றில்லை
ஆழம் வேறில்லை
கலைவே றில்லை கவிவே றில்லை
கவினும் வேறில்லை
மலைவே றில்லை அருவித் திரளின்
மழலை வேறில்லை
நிலைவே றில்லை நான்வே றில்லை
நீயும் வேறில்லை!

ஓடும் படத்தின் ஒளித்திரை போலே
உள்ளான்மா நிலையாம்
ஆடும் வாழ்வை ஆட்டும் அதுநீ
ஆடா மணிவிளக்கே
வாடும் போது வசந்தப் பொலிவாய்
வருவது வும்நீயே
தேடும் போது கூடும் பருவந்
தெரிந்தருள் வாய்நீயே!

சிற்பியில் லாது சிலையழ கில்லை
சிவனே நின்னருளின்
சிற்கன லின்றிச் சீவனு மில்லை
சிந்தைக் கனவின்றிப்

பொற்புறு கவிகள் பொலிவது மில்லை
　　பூவின்றி மணமில்லை
அற்புத மான ஐந்தொழி லாற்றும்
　　ஆனந்தக் கனலே !

அந்தம் பலவாம் சந்தம் பலவாம்
　　ஆகம விதி பலவாம்
தொந்தம் பலவாம் சொந்தம் பலவாம்
　　தொல்பிரி வினை பலவாம்
தந்தம் மதமே சம்மத மாகச்
　　சாற்றும் மொழி பலவாம்
அந்தக் கரணத் தறிவுக் கறிவாம்
　　அறிவும் ஒரு நீயே !

சாதிகள் பலவாம் சமயங்கள் பலவாம்
　　சாத்திரங் கள்பல வாம்
மேதினி மாந்தர் வேற்றுமை பலவாம்
　　வீண்வா தம்பல வாம்
பேதை மனத்தின் பிரிவினை பலவாம்
　　பேச்சுக ளும்பல வாம்
ஆதிசுத் தான்ம ஒருமையில் வாழும்
　　அறிவைத் தந்தரு ளாய் !

படிப்பது நீயே நடப்பது நீயே
　　பார்ப்பது வும்நீயே
துடிப்பது நீயே உயிர்ப்பது நீயே
　　தூங்குவ தும்நீயே
உடுப்பது நீயே உண்பது நீயே
　　உடலா லயத்தானே
அடிப்பது நீயே அணைப்பது நீயே
　　அன்புப் பெருமானே !

ஆக்கி யளித்தே நீக்கி மறைத்தே
　　யருளும் திருக் கூத்தா !
வாக்கமு தாலே வழிபடு கின்றோம்
　　வழிகாட் டுந்துணை வா !

நாக்கை யடக்கி மனதை யடக்கி
நானென் பதை யடக்கி
போக்கை யடக்கி வரவை யடக்கிப்
பூரண மீந்திடுவாய் !

பிறந்து மிறந்தும் பிணிபல சுமந்தும்
பேய்போலே யலைந்தும்
மறந்துனை மாயக் காட்டிருள் பற்றி
வாடித் தவிக்கின்றோம்
திறந்தக விழியைச் சிவநெறி காட்டிச்
சீவனை வழி நடத்தாய்
அறந்தரு மின்பத் திறந்தரு மரசே
ஆடற் பெருமானே !

ஆட்களைச் சுற்றும் மதச்சுவர் வேண்டோம்
அன்பை வேண்டுகின்றோம்
வாட்களைச் சுற்றும் அரசியல் வேண்டோம்
வாய்மை வேண்டுகின்றோம்
தாட்களைச் சுற்றும் சடங்குகள் வேண்டோம்
சாந்தம் வேண்டுகின்றோம்
நாட்களைச் சுற்றும் நாடகம் வேண்டோம்
நல்லருள் வேண்டுகின்றோம்

வானணுத் திரளை வன்கன லாக்கி
வாழுலகை யழிக்க,
நானெனக் கிளம்பும் அரசியல் வெறியை
நலியத் தீட்டிடுவாய்
தானெனு மான்மச் சமநிலை யோகந்
தாரணியிற் பரவ
ஞான வரந்தா மோன வியல்பா,
ஞாலப் பெருமானே !

நல்லார் பொல்லார் நண்பர் பகைவர்
நடுவர் எவருள்ளும்
கல்லா ருள்ளுங் கற்ற ருள்ளுங்
கருதும் மனச்சாட்சி

எல்லா ருள்ளும் இயல்பா யிருக்கும்,
இதயக் குகனே ஓம்
சொல்லா தறிய வல்லாய் ஆத்ம
ஜோதிப் பெருமானே !

சினங் காமாதி தீமைக ளற்ற
செவ்விய வாழ்வருள்வாய்
இனஞ் சாதியெனும் இருமாப் பற்ற
ஏக வுணர்வருள்வாய்
தினஞ் சாட்சியதாம் செங்கதிர் போன்ற
ஜீவியமே தருவாய்
மனஞ் சாட்சியினை மதித்து நடக்கும்
மதியைத் தந்தருள்வாய் !

தூய நினைவுந் தூய செயலுந்
தூய மொழிச் சுவையும்
தூய வுடலுந் தூய மனமுந்
தூய நலம் பலவும்
ஆயு மறிவும் ஆத்ம பலமும்
அன்புத் தொண்டர் களின்
நேய பலமுந் தந்தரு ளாயே
நெஞ்சப் பெருமானே !

நித்திய மான நின்னரு ளீவாய்
நின்மல வாழ்வரு ளாய்
சத்திய மான வாக்கினை யருளாய்
சாந்த மனந்தரு வாய்
உத்தம மான நண்பரைத் தருவாய்
உள்ளன் பைத்தரு வாய்
ஒத்துயி ருலகம் ஒருமையி லோங்கும்
யோக பலந்தரு வாய் !

மண்ணே பொன்னே பெண்ணே யென்று
மயங்கு மனக் குரங்கு
கண்கா துவழித் தாவிக் குதித்தே
கவலை தருங் குரங்கு

புண்ணாம் பிறவித் துயருக் கிழுத்துப்
போகும் பொய்க் குரங்கு
பண்ணார் அன்பர் குழுவிற் பயிலும்
பண்பா டுறவரு ளாய் !

அண்மைத் தருவாய் நன்மைத் தருவாய்
அழகுக் கலைதரு வாய்
வண்மைத் தருவாய் பதிபசு பாசப்
பயனறி வைத்தரு வாய்
புண்பட் டுலையும் புவிவாழ் வுக்குப்
புதுமைப் பொலிவரு ளாய்
இன்பச் சிவனே இதயக் கோயில்
இலகும் பெருமானே !

அப்பர் மணிவாசகர் தாயுமானார்
அருண கிரிமூலர்
செப்பிய தமிழைச் செப்பி மகிழுந்
திறமை யெனக் கருளாய்
அப்பனே சரணம் அம்மையே சரணம்
ஆண்டா னேயெம்மை
எப்படி விருப்பம் அப்படி நடத்தாய்
இதயப் பெருமானே !

விஞ்ஞா னத்தால் வாழ்வு செழிக்கும்
வியன்கள் புரிய வருள்
அஞ்ஞா னத்தால் அணுகுண் டெறியும்
அடுபோர் நீக்கி யருள்
மெஞ்ஞா னத்தால் மேதினி யன்பு
விண்ணக மாக வருள்
எஞ்ஞா னத்தும் மெஞ்ஞா னமதாய்
இலகும் பரமாத் மா !

கள்ளங் கண்ட அரசிய லுலகிற்
கருணைக் கதிர் வீசாய்
உள்ளங் கண்ட ஒருமை கூடி
உலகம் உய்ய வருள்

வெள்ளங் கண்ட விளைபயி ரெனவே
விஞ்ஞா னப்புல வர்
ஒள்ளன் பாலே உலகிற் கமைதி
யுலவ நடத்திடு வாய்!

அன்றும் இன்றும் என்றும் அதுவாம்
ஆதிப் பொருளறிவில்
ஒன்ருய் மாந்தர் உவந்து கூடும்
யோகப் பொதுவெளியில்
நன்ருய் மனதை வென்று நிறுத்தி
நலமோங் கிடவருளாய்
மன்ரு யன்பர் உள்ளத் தாடும்
மாணிக்கச் சுடரே!

ஒன்றே வானம் ஒன்றே பூமி
ஒன்றே உயி ரான்மா
ஒன்றே உள்ளம் ஒன்றே மாந்தர்
ஒன்றே பரமாத் மா
என்றே பாடிப் பணிசெய் திங்கே
இலகச் சமயோ கம்
இன்றே தருவாய் நன்றே புரியும்
இறைவா ஓம் சரணம்!

வானும் புவியும் வாழ்வும் வரமும்
மலரும் மணமும் போல்
தேனும் பாலும் போலே கூடித்
திளேக்கத் தூயான் மா
நானும் நீயும் ஒன்றென் றுணரும்
ஞானச் சுடரோங்கி
மானுடந் தெய்வ மலர்ச்சி பொலியும்
மகிழ்ச்சி யருளாயே!

வாழிய தூயர் வாழிய நேயர்
வாழிய பொதுநல்லார்
வாழிய சுத்த சமயோ கத்தின்
மங்கல வாழ்த்தொலியே

வாழிய புலவர் வாழிய கலைஞர்
• வாழிய ஊழியரே
சூழிய சுத்த சச்சிதா னந்தச்
சுடரொளி யாங்கிலுமே!...

★

# அருள் விளக்கம்

உலகெலாம் கோயில் கொண்ட ஓம்சக்தி
ஒளிமயக் கடவுளே போற்றி!
நலமெலாந் தந்த நாயகா உன்னை
நம்பியே ஞாலத்தில் உயிர்த்தேன்.
தலமுயர் சென்னைப் பதிவளர் சுத்த
ஜன சமயோக சமாஜம்
இலகிடத் துணைசெய் இரவியின் சுடர்போல்
இறைவனே ஓம்குரு பரனே!

அளித்தநல் ஏழுப தாண்டுகள் உனையே
அன்புசெய் தருட்கவி மாலை
களித்தகங் குளிரச் சூட்டினேன்; என்றன்
காவியக் கனவுகள் உருவாய்த்
தழைத்திடத் தூய யோக சமாஜம்
சகமெலாம் பரவிட அருளாய்!
உழைத்திடும் தொண்டர்க் குதவிடுந் துணையே
ஓம் சுத்த சக்தி ஓம்சிவனே!

தடித்தபொய் யுலகின் இடர்களைத் தாண்டிச்
 சாதுக்கள் சங்கமே சேர்ந்து
படித்தமெய்ப் பொருளும் பார்த்த நற்பொருளும்
 பாடிய தூய மெய்ப்பொருளும்
பிடித்தநல் யோகப் பெருந்தவ நிலயம்
 பிழையறத் துலங்கிட அருளாய்!
வடித்த கண்ணீரும் வாழ்த்திடும் மனமும்
 வழங்கினேன் கருணையின் வடிவோய்!

துடிக்குதென் மனமே, துயரிடர்க்குலங்கள்
 சூழ்ந்திடர் செய்திடக் கண்ணீர்
வடிக்குதென் விழியே, வஞ்சகர் செய்யும்
 வன்கொடும் வினைகளைத் தாங்கேன்.
தடிக்குது விசனம்; தயவுள துரையே!
 தவித்திடும் கவிமலர் குலுங்கும்
கொடிக்குன தருளைக் கொடுத்திடாய், தம்மைக்
 கொடுத்தவர்க் கின்பமே கொடுப்பாய்!

புளித்தவெம் பித்தப் பொருமையும் சூதும்
 பொய்வழக் காடலும் புரிந்தே
களித்தகங் கரித்தே காரியங் கெடுக்கும்
 கலகரை விலகிடப்புரிவாய்,
அளித்துநல் லன்புத் தொண்டரை யுன்றன்
 அருட்சம யோகசமாஜம்
ஒளித்திரு வோங்க நடத்துவாய் உள்ளத்
 தொருவனே, பரமனே, சரணம்!

கன்மன வரக்கர், கடவுளின் அடியார்
 கலங்கிடச் செய்துயர் தாங்கேன்!
என்மனப்படியிங் கெதுவுமே யில்லை;
 ஈசனே உன்செய லெல்லாம்.
உன்மனப் படிக்கே யாகுகவென்றே
 உள்ளுரு கத்துதி செய்தேன்.
வன்மனத் தவரும் திருந்தியுன்னருளை
 வாழ்த்திட வகையினைச் செய்வாய்!

புலி நரிக் காட்டில் புகலற்ற குழந்தை
போலெனைக் கைவிடல் அழகோ?
கலிதரும் அரக்கர் கண்டவாறென்னைக்
கடுகடுத் திடுவதுன் மனமோ?
பலியிரணியரின் பலத்தினைச் செற்றே
பக்தரைக் காத்ததும் பொய்யோ?
நலிவறு சுத்தசக்தி நாயகனே!
நம்பியே உனைச்சரண் புகுந்தேன்!

புன்மையாம் சாதிச் சமயங்களின்றிப்
பூரண சுத்த யோகத்தில்
உன்மய மாக உணர்ந்துயிர்க் குலங்கள்
ஒருமையிற் கூடியிங் கோங்க
நன்மையே புரியும் யோகசமாஜம்
நாட்டினேன் உன்னருளாலே!
கன்மனப் பகைவர் கலைத்திடா திதனைக்
காப்பதுன் கடமையதாமே!

மாசறு மனமும் இனியநல் வாக்கும்
மன்னுயிர்க் கின்னிய பணியும்
ஏசறு நடையும் இறையுணர் வாழ்வும்
எனதுன தென்றிடாத் திருவும்,
பேசநற் கவியும் பெரியவர் உறவும்,
பிரியமாந் தொண்டரின் கூட்டும்
காசினிபோற்றுங் கடமையுங் காத்துக்
காணுக வெற்றியிப் பணியே!

இனித்தநறுந் தேனுடனே
இணையமுதக் கனிபோல்
மனத்தகத்தே தித்திக்கும்
மணிமன்றப் பெருமான்;
எனைத்துலகும் வணங்குகின்ற
சுத்தசக்தி யிறைவன்
அனைத்தினுக்குந் தலைவன் அவன்
அவனடிமை யானே!

மரணபயம் ஒழிக்கின்ற
 மாணிக்கச் சோதி
சரண்புகுந்தே சாற்றுகின்றேன்
 யோக சமாஜத்தீர்
தரணியிலே சாதிமதச்
 சண்டை யினியில்லை;
முரணின்றி சுத்தசக்தி
 முதல்வனிங்கே தலைவன்!

தனித்தலைவன் அருளாலே
 யோக சமாஜத்தில்
இனித்தநறுந் தொண்டர்குலம்
 இலகிநல மோங்கும்!
அனைத்துலகும் சுதந்தரமாய்
 அமைந்திங்கே வாழ
எனைத் தந்தான் அவனுக்கே
 எனைத் தந்தேன் அடியேன்



# இதய கீதம்

வந்திருந்து செல்லும் வாழ்விலே—என்றும்
வாய்மையாக வாழும் ஒன்றெது ?
சிந்தை செய்து பார் தினந்தினம்—ஒரு
ஜீவசாட்சி யுள்ள துன்னுளே !
பந்ததொந்த பாசமற்றதாம்—அது
பாப புண்ய மற்ற ஞானமாம்
அந்தமாதி யற்ற மோனமாம்—சச்சி
தானந்தாத்மா நானென் றெண்ணுவாய் !

நாவினிற் சுவைப்பதப்பொருள்—நம்
நரம்பினில் உணர்வ தப்பொருள் ;
ஆவியில் உயிர்ப்பதப் பொருள்—உள்
அன்பினில் இனிப்ப தப்பொருள்
பூவினில் மணப்ப தப்பொருள்—பஞ்ச
பூதக் கூட்டில் வாழும் கிஞ்சுகம்—இங்கே
சாவினைக் கடந்ததப் பொருள்—சுத்த
சச்சிதானந் தாத்ம சக்தி ஓம் !

கண்ணையுட் குவிந்து காணுவோர்—அந்தக்
கரணத்துட் கலந்து காண்பது
விண்ணும் மண்ணும் ஆனஜோதியே—ஆத்ம
வீணையின் இனிய நாதமே
எண்ணையும் திரியும் தீபமும்—ஒளி
ஏறு பொற் சுடரும் ஆனதே
நண்ணுதற் கரிய நுண்மையாம்—சச்சி
தானந்தாத்மா நானென் றோதுவாய் !

நம்பு நம்பு 'நான் அது'வெனு ; பின்பு
நமனுமில்லை நரகு மில்லையே!
நம்பு 'நான் எனக் கரசெனு'—பின்பு
நச்சடிமை யச்சமில்லையே !
நம்பு 'விண்ணரசென் னுள்' எனு—பின்பு
நலிவுமில்லை ; துயருமில்லையே !
இன்பவாரி யிவ்வுலகமே—அதன்
இதய கீதம் இனிய வாழ்க்கையே !

# முருக ஜபம்

மருளார் பிறவித் துயர் தீர மருந்தொன்றுண்டு மாநிலத்தே
இருளார் வினைகள் இயலாமே இதயத் தெளிவு தரு மருந்து
பொருளார் பரமன் அருட்கனலிற் பூத்த மருந்து பழநிமலை
முருகா முருகா எனுமருந்து முத்தி மருந்து காண் மனமே!

அன்பே யான சிவபெருமான் அருளே யான தவ மருந்து
புன்பேயச்சப் பொய்க்குலங்கள் போரற்றொழியும் திருமருந்து
துன்பே யின்றி யின்பருளும் சுத்த சக்திச் சுடர்மருந்து
தென்பேர் பழனி மலைமருந்து தெய்வ மருந்தையருந்துவமே.

பித்தா என்ற சுந்தரர்க்கும் பெருமை தந்த பரம சிவன்
முத்தார் மைந்தன் ஓங்கார மூலப்பொருளை முறைவகுத்த
சித்தார் பழனி மலையாண்டி செந்தில் வேலன் காங்கேயன்
வித்தார் ஞான மொழி வேந்தன் விமலபாத மருந்திதுவே.

சுத்தா சோதிச் சுடர் வேலா தூய பழநி யாண்டவனே
பத்தர் கவலை மாற்றிடவே பரிந்து வந்து மயில்மேலே
சித்தத் திருந்து மனஞ் சிலிர்க்கத் திவ்ய நடனம் ஆடிடுவாய்
எத்தாலுமிங் கிடரில்லை எடுத்த செய்கை இனிதுறுமே.

கல்லுந் தெப்ப மெனமிதக்கும் காட்டு யானை முன்வணங்கும்
கொல்லும்விடமும்அமு தாகும்கொடியபாம்புங் குடைபிடிக்கும்
சொல்லா ஊமை கவிபாடும் சுத்தசக்திச் சுடர்க்கொழுந்தாம்
எல்லாம்வல்லமுருகோனை இசைப்பார்க்கெல்லாம் எளிதாமே

கருதா துலகிற் புண்ணியங்கள் கற்பகாலம் செழித்தோங்கும்
அருகே நிற்கும் அரும்வரங்கள் அஞ்சேல் அன்பு நெஞ்சே நீ
குருவாய்வந்துள்ளருள்சுரப்பான்குமரா அமரர்படைத்தலைவா
முருகாமுருகா என்று நிதம் முன்னின் றுருக முனைவாயே.

பழனி பழனி யென்றதுமே பழைய வினைகள் பயந்தோடும்
பழனி வேலன் பதம்பிடித்தால் பாழுங்கவலைத் துயர் மாறும்
பழனியப்பன் புகழ் பாடின் பந்தபாசப் பகையகலும்
பழனி முருகன் அருகிருந்தால் பரமானந்தம் பெறலாமே!

# குருவாயூரப்பன் மாலை

சுந்தரச் சோலைத் தென்றல்
சுதந்தரக் குழலைக்கொஞ்சச்
சந்தமார் வேத கானம்
தத்தைகோகிலத்திற் கொஞ்ச
சிந்தனைக் கினியதான
தெய்வநல் லழகு கொஞ்ச
வந்தனை செய்து கண்ணன்
மலரடி கொஞ்சு வோமே!

அறம்பொருள் இன்பமெல்லாம்
அன்பருக் கருளும் பாதம்
திறம்பெறு சக்தி யெல்லாம்
சீலருக் கெளிதாய் நல்கும்
வரந்தரு வள்ளல் எங்கள்
வழிவழிக் கடவுள் எம்மான்
சுரந்திடும் அமுத பானம்
துய்த்தவர் முக்தர் தாமே!

இல்லறந் தழைக்க நாட்டின்
இயலறந் தழைக்க, வேதச்
சொல்லறந் தழைக்க, செல்வத்
தொழிலறந் தழைக்க, வீர
வில்லறந் தழைக்க, ஞான
வீட்டறந் தழைக்க, மாந்தர்
நல்லறந் தழைக்க ஓம்ஸ்ரீ
நாராய ணைவென் றுரைப்போம்!

குருவாயூ ரப்பா என்போம்;
குறையெலாம் உடனே தீரும்
கருவான கணக்குந் தீரும்
கருமபா சங்கள் தீரும்;

வெருவுறு நோயுந் தீரும்;
வேதனை தீரும்; தூய
திருவுறு நன்மை யெல்லாம்
சேர்ந்திடும் உலகத் தீரே...

கலைவடி வத்தைக் கண்டோம்
கண்குளிர் கருணை கண்டோம்
மலையெனத் தோளைக் கண்டோம்
மனமயக் கெல்லாம் தீர்ந்தோம்
நிலைபெறுங் கோயில் கண்டோம்
நிலவும் வைகுண்டம் கண்டோம்
தலைபெறும் குருவாம் அப்பன்
சந்நிதிப் பெருமை கண்டோம்!



# சுத்த வேத தர்மம்

ப்ரேமாகாரம் கருணஹ்ருதயம்
நிர்மலானந்த ராசிம்
சர்வாதாரம் சகுண நிலயம்
சர்வதர்மைக்ய வாரிம்
சுத்தம் சக்திம் ஸுபுவன ஹிததம்
சுந்தரம் ஜ்யோதி ரூபம்
தேவம் வந்தே ஹ்ருதி நடனபரம்
ஸச்சிதானந்த மூர்த்திம் |

அன்பே உருவாம் அருளே உளமாம்
இன்பத்தூயா போற்றி !
ஆதார நிலையே அருங்குணக் குன்றே
அறவா ழியனே போற்றி !
உலக நலஞ்செய் உள்ளழ கொளியே
ஓம் சுத்த சக்தியே போற்றி !
அகநாடகனே அமரா சச்சி
தானந்தப் பரமா போற்றி !

சிவம் வா விஷ்ணு மூர்த்திர் வா
சுத்த மேகம் நிரஞ்சனம்
ஓம் தத்ஸத் இதி மந்த்ராக்யம்
பரம் ஜ்யோதிர் உபாஸ்மஹே !

சிவ நாரணனும் ஒருவா, மாசறு
தூயா, தூயவர் நேயா !
ஓம் தத்ஸத் என ஓதிப் பணிவோம்
உயர்பரஞ் சுடரே போற்றி !

ஆலயம் லோகமகிலம்
ரூபம் ஸர்வாத்ம ஸங்குலம்
நிஷ்காம்ய ஸேவா ஸத்பூஜா
முக்தி : ஸர்வாத்ம மங்களம் |

உலகே கோயில் உயிர்க்குலம் கடவுள்
ஓங்கருட் பணியே பூசை
நிலவுயி ரெல்லாம் நலமுயர் இன்பே
நேரிய முத்தியாம் எமக்கே! 3

ஆத்மவத் ஸர்வ பூதானி
விபஶ்யன் ஐக்ய பாவனுத்
காருண்ய ஹ்ருத யான் லோக
ஹிதம் குர்யாத் பவித்ரவான் |

தன்னுயிர் போலே மன்னுயிர் பேணும்
சமயோக ஒருமையினுலே
இன்னுயிர்க் கருணை இதயத்தாலினிதே
இயற்றுக தூயநல் லன்பர் 4

மனோ வாக்கேஷு காயேஷு
ஜீவனேஷு ச கர்மஸு
கரணேந்த்ரிய போகேஷு
சதா சுத்தம் ஸமாசரேத் |

மனமொழி மெய்யில் மானிட வாழ்வில்
மன்னுயிர்ப் பணிநலந் தன்னில்
தினந்தினம் அந்தக் கரண சுகத்தே
திருவுறு தூயராய்த் திகழ்வோம்! 5

புக்திர் விஞ்ஞான ஸத்கர்ம
த்யானம் வை ஜபகீர்த்தனம்
சாது ஸங்கஸ்ச ஸ்த்ஸேவா
காருண்யம் சுத்த சாதனம் |

தெள்ளறி வன்பு திருவினைத் திட்பம்
தியான, கான, ஜபமுடனே
ஒள்ளிய கருணை உயர்நலத் தொண்டோ
டுத்தமர் நேயமே தூய்மை! 6

காமக்ரோத விஞசார்த்தம்
தர்மார்த்தம் வீரதீரவான்
சுத்த முக்த ஸமத்வார்த்தம்
குர்யாத் சன்மார்க்க சாதனம் !

காமக்குரோதம் கட்டுடன் ஒழியக்
கடவுளறத்திலே வாழ
நேம சுத்தான்ம சமத்துவ முத்தி
நிலைத்தநல் வழி நடப் போமே ! 7

ஸர்வ சிந்தாம் பரித்யஜ்ய
அந்த : ஸூன்ய ஸமாதிஞ !
சுத்தசக்தி ஓமித் யேவம்
த்யாயேத் ஹ்ருதய மந்திரே !


தனை சுத்த சக்தி ஓம் சுடரென்றே
தியானித்துள் ளாலயந் தனிலே
நினைவுகளற்ற நின்னுளே நீயாம்
நிறைவெளி நிற்றல் சமாதி 8

த்யானமேவ பரோ யோக:
த்யானமேவ பரந்தப:
த்யானேன ஆத்மனி பஶ்யந்தி!
த்யாயேத் ஓங்கார ரூபிணீம் !

தியானமே யோகம் தியானமே வேதம்
தியானமே பரம சாதனமாம்
தியானத்திஞலே தன்னறிவாமே
தியானிப்பீர் ஓங்கார ஒளியை ! 9

சுத்தஸ்ய முக்தஸ்ய ஸ்வதர்த்ரதா ச |
சமஸ்த ஜீவாத்ம ஸமத்வ சிந்தனம் |
த்யானம் ஜபம் புக்தி விசேஷ ஸாதனம்
ஓம் சுத்த சக்த்யோ : பரிபூர்ண யோகம் ||

சுத்த முக்த சுதந்தர சமத்துவமும்
சுத்தாத்ம ஞான வுணர்வும்
பக்தித்யான ஜபமுடன் சுத்தசக்தி ஓம்
பரிபூரண சமயோகம்! 10



சுத்தானந்தா அச்சகம், அடையார், சென்னை–20

## கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்
### தவயோகத்திற் கனிந்த அற்புத நூல்கள்!

| | | |
|---|---|---|
| 1. | கீதா யோகம் | ரூ. 2—[illegible] |
| 2. | ஆத்ம சோதனை | ... 4—00 |
| 3. | ஆத்ம நாதம் (அருளிற் பூத்த பாடல்கள்) | ... 3—00 |
| 4. | சுத்தானந்த நடனாஞ்சலி | ... 2—00 |
| 5. | உலகப் பாட்டு | ... 1—50 |
| 6. | சிங்க நாதம் | ... 1—00 |
| 7. | ஸ்ரீ ரமணானுபவ கீதம் | ... 0—50 |
| 8. | ஊமையன் சண்டை | ... 1—50 |
| 9. | மனப்புயல் | ... 1—50 |
| 10. | சுத்தானந்த கீர்த்தனாஞ்சலி (1015) | ... 5—00 |
| 11. | யோகசித்தி (மூலம்) | ... 0—40 |
| 12. | சுத்த சக்தி உபாசனை | ... 0—75 |
| 13. | முன்னேற்ற முழக்கம் | ... 1—50 |
| 14. | அருட்செல்வம் | ... 2—00 |
| 15. | கவியரங்கம் | ... 1—50 |
| 16. | ஆதி சங்கர பகவான் | ... 2—50 |
| 17. | அன்னை | ... 0—50 |
| 18. | குழந்தையின்பம் | ... 0—50 |
| 19. | மந்திரமாலை | ... 1—50 |
| 20. | வேத சாதனம் | ... 1—50 |
| 21. | இந்திய சரித்திரக் கும்மி | ... 0—40 |
| 22. | பத்தி நெறி | ... 0—25 |
| 23. | நெஞ்சமாலை | ... 0—50 |
| 24. | காலத்தேர் | ... 2—00 |
| 25. | Integral Yoga | ... 1—25 |
| 26. | Voice of Tayumanar | ... 2—00 |
| 27. | Silent Splendour | ... 2—00 |
| 28. | Yogi Shuddhananda Bharati (A Study) | ... 4—00 |
| 29. | The Yogi and His Words | ... 1—25 |
| 30. | Sadasiva Brahmam | ... 0—40 |
| 31. | Experiences of a Pilgrim Soul | ... 5—50 |

---


**சுத்தானந்த நூலகம்**

"சமாஜம்" அடையாறு :: சென்னை-20